தென்மொழி

தனித்தமிழ்
இலக்கியத் திங்களிதழ்

சுவடி-7. ஓலை-1
கும்பம் தி. பி. 2000.

விலை 75 காசு

விடுதலை மருந்து !

ஊட்டப் பெருத உணர்வொடு விலங்கும்
பறவையும் ஒற்றுமை யுறுங்கால்
மாட்டப் பெருது வலிந்துநாம் புகுந்து
மனங்கெட மதம்,குலம் என்னும்
பூட்டப் பெருத சிறைகளி லிருந்து
புழுங்குற அறிவெலாம் புதைந்து
கூட்டப் பெருமல் சிதைவுறும் நமக்கே
கூடுமோ விடுதலை அமிழ்தே !

கத்தப் பெருமல் குழவிவாய்க் கமிழ்துங்
கனிவுறத் தாய்தரல் உண்டோ ?
கொத்தப் பெருமல் பைங்கிளி வாய்க்கே
குலைக்கனி சாய்தலும் உண்டோ ?
மொத்தப் பெருமல் கவர்பொருள் கள்வன்
முன்வரத் தருதலும் இயல்போ ?
வித்தப் பெருமல் விளையுமோ நமக்கே
விடுதலை எனும்உயிர் மருந்தே ?

நமக்கு வந்த மடல்கள்.

☐ பெருமதிப்புக்குரிய ஐயா, தங்கள், ''அண்ணு இரங்கற் பத்து''ம் ''தலையிழந்தது தமிழகம்'' ஆசிரிய உரையும் அறிஞர் அண்ணு அவர்களின் மறைவைத் தாங்கிக் கொள்ள முடியாத தமிழ் நெஞ்சங்கட்குப் பெருமளவில் ஆறுதல் அளிப்பனவாகும். தமிழர்களின் மறுமலர்ச்சியைக் காணத் துடித்த அத் தமிழர் தலைவனின் தமிழ் நெஞ்சத்தைத் தமிழியக்கத் தானைமறவராகிய தாங்கள் பாராட்டுவது பொருத்தமும் சிறப்புமுடையதாகும்.

அவனைத் ''தமிழக வரலாற்றில் தோன்றிய விடிவெள்ளி...அடிமைத் தமிழினத்தின் ஆபிரகாம் இலிங்கன்... பகுத்தறிவுப்பகலவன்'' என்றும் ''அரிய இன உணர்வை அறிஞர் அண்ணு அவர்களால்தான் ஆக்கிக்காட்ட முடிந்தது'' என்றும் ''நேரிய அவன் நோக்கு நமக்காக வளைக்கப் பெற்றது. நேரிய அவன் போக்கு நமக்காகத் திசை திருப்பப் பெற்றது'' என்றும், மக்களை ஈர்த்த தலைவன், அரசியல் மாண்புணர்ந்தான்; பாலை நிகர்த்தது நெஞ்சம்! பனிநிகர் பைந்தமிழ்ச் சொல்! வேலை நிகர்த்தது கூர்விழி! நீண்டு விரிந்த நெற்றி நூலை நிகர்த்தது; கல்லாப் பொதுநிலை மாந்தருக்கும் சோலை நிகர்த்ததே அன்னவன் செந்தமிழ்ச் சொற்பொழிவே! என்றும், ''நம் கட்சி வேறுபாடுகள், இன இழிவுகள், மனமுட்டங்கள் சொற்கோட்டங்கள் அத்தனையும் துடைத்தெறிந்தாலன்றி நாம் அப்பெருமகன் அருகே நெருங்கவும் தகுதிபற்றவர்களாகப் போய்விடுவோம்'' என்றும், தங்கள் தமிழ் நெஞ்சினின்றும் வெளிப்பட்ட இம் மொழிகள் சிறிதும் மிகைப்படாத ஆனுல் அப் பேரறிஞரின் தகைமைதனை உள்ளவாறு எடுத்தியம்பும் மெய்ம்மொழிகளாம். ஆனுல் இந்த அளவுக்கு நன்றியுணர்வோடு பாராட்ட முனைந்த தாங்கள் அன்னவன் வாழும் நாட்களில் அவனை வெளிப்படையாகப் பாராட்டாமல் ஒதுங்கியிருந்தீர்களே, அஃது ஏன்?

க. சின்னச்சாமி, அறி. இ. மதுரை. 24-2-69.

☐ வணக்கம் பல; 'தமிழகம் தலையிழந்தது' ஆசிரியவுரை தங்கள் உள்ளத்தைத் திறந்து கொட்டிஞற் போன்றுள்ளது. 'அண்ணு இரங்கற் பத்து' அருமையான விருந்து! தொல்காப்பியச் சொல்லாராய்ச்சிக் கட்டுரை தொடர்ந்து வெளிவந்து, என்னைப்போன்ற பலபேருக்கு பயனளிக்கும் என எண்ணுகிறேன். 'பாட்டரங்கம்' பகுதி வளர்ந்து வரும் இளம் பாவலர்க்குப் பெரிதும் ஊக்கமளித்து வந்தது. எனவே அதை மீண்டும் ஏற்படுத்த வேண்டுகிறேன். 'ஐயை' போன்ற ஒரு சிறந்த பாவியம் விரைவில் தங்களால் தொடங்கப்பட வேண்டுகிறேன் எவர்செய் கேட்டினுக்கும் அஞ்சாமல் உண்மையைத் துணையாகவும், நேர்மையை வழிகாட்டியாகவும், கொண்ட தங்களின் குறிக்கோள் வெற்றிபெறும் நாள் வெகு தொலைவில் இல்லை.

-துரையன், வடலூர்.

△ அன்புடைய ஆசிரியப் பெரும, சுறவம் இதழுடன் மிக்க பயனுடைய திருவள்ளுவர் நாட்காட்டி அனுப்பியமைக்கு நன்றி! சுறவம் இதழில் வெளியான ஆசிரியஉரை தங்கள் நடுநிலையான ஆசிரியவுரைகள் பலவற்றுள்ளும் மிகச்சிறப்பானது. தமிழ்மகன் ஒவ்வொருவனும் வடிக்கும் கண்ணீர்த்துளிகளை அவ்வுரையில் காணமுடிந்தது. மொழியியல், பொருளியல், அறிவியல், கட்டுரைகள் மிகச் சிறப்பாக

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்)



தென்மொழி

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி-7: ஓலை-1

கும்பம் தி. பி. ௨௦௦௦ (1969-பிப்ரவரி-மார்ச்சு)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1

புதிய அமைச்சரவை!

அண்ணா அவர்களின் மறைவுக்குப்பின் அமைக்கப்பெற்ற அமைச்சரவையின் குறைநிறைகளை ஆய்வதன்று இவ்வுரையின் நோக்கம். எஞ்சியுள்ள மூன்றாண்டுக் காலத்தில் எப்படியெப்படியெல்லாம் இவ்வமைச்சரவை செயல்படவேண்டும், என்பதைப் பற்றி ஒரு சில கூறுவதே இதன் நோக்கமும் நம் கடமையுமாகும். இந்நிலையில் கடந்த காலத்தைப்பற்றி ஓரளவுநாம் நினைத்துப் பார்த்துக்கொள்ள வேண்டுமே யொழிய, சொல்லிக்கொண்டிருப்பது தேவையில்லாததாகும். அண்ணா அவர்களுக்கு எத்தனைத் தகுதிகள் உண்டோ அத்தனைத் தகுதிகளையும் நாம் ஒருமுறை சொன்னாலும் ஒன்றுதான்; ஆயிரமுறை கூறினாலும் ஒன்றுதான். இவர் சொன்னாலும் ஒன்றுதான் அவர் சொன்னாலும் ஒன்றுதான். ஒரு நாளிதழின் முழுவெளியீடும் இதற்காகச் செலவழிக்கப்பட வேண்டியதில்லை. அவ்வாறு நாம் செய்வோமானால், காந்தியார் ஒருவரை வைத்துக்

கொண்டே, பேராயக் கட்சிக்காரர்கள் எவ்வாறு அரசியல் நடத்த வேண்டுமென்றெண்ணித் தோல்வியுற்றுப்போனார்களோ, அவ்வாறு தான் நம் முடிவும் இருக்கும் என்று இப்பொழுதே கருதிக்கொள்ளலாம். ஒரு தலைவனுக்கு நாம் கொடுக்கின்ற மதிப்பெல்லாம் நம் பேச்சில் இல்லை; செயலில்தான் இருக்கின்றது. பகுத்தறிவுக் கொள்கையை முழுமையாகக் கடைப்பிடிப்பதாகச் சொல்லிக் கொள்ளும் நாம், மேலும் மேலும் இவ்வழியில் நம் பகுத்தறிவை இழந்துவிடக் கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருந்தாக வேண்டும்.

திரு. கருணாநிதி அவர்கள் அண்ணாவைப் போலவே செயல்பட்டார் என்று பிறரைச் சொல்லச் செய்வது மிகவும் எளிது. அவரைவிட மேலாகச் செயல்பட வேண்டும் என்பதே நம் கொள்கை; விருப்பம்; தேவை! தென்னாட்டுக்கு இன்னொரு காந்தி தேவையில்லை; தமிழர்களுக்கு இன்னொரு விடுதலை மறவன் தேவை. தமிழர்களின் இன இழிவுகளையும் குலக் குப்பைகளையும் அடியோடு வாரியெறிய ஒரு தலையாய சீர்திருத்தக்காரன்தான் இன்று நமக்குத் தேவை. தமிழனின் இழிவுகள் போக்கப்பெறும் வரை நாம் எதிர்நோக்க வேண்டுவது செயல், செயல், செயலே! அதுவரை நமக்கு ஓய்வும் தேவையில்லை; பாராட்டும் தேவையில்லை. மாலைகளும் தேவையில்லை. நம் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் இவற்றைக் கருத்தில் இருத்திக் கொள்ள நாம் வேண்டிக் கொள்கின்றோம்.

மொழித்துறையில் நாம் முடமாக்கப்படும் வரை, நம் விடுதலைப் பாதையில் ஓர் அடியும் முன்னேறிவிட முடியாது. ஓர் இனத்தின் கட்டுக்கோப்பே மொழியின் அடிப்படையில்தான் அமைய முடியும் என்பது அழிக்கமுடியாத கொள்கை. பெரியார் எத்தனைதான் சீர்திருத்தக் கருத்துகளைக் கொட்டினாலும் தமிழ் மொழியை அவர் புறக்கணிக்கும் வரை தமிழர்களின் நிலை ஓர் எள்ளின் மூக்கத்துணையும் முன்னேறிவிட முடியாது. தமிழ் மொழியைப் பற்றி அவர் கணித்திருக்கும் கணிப்பு நமக்கு ஏற்றதன்று. மொழியை இழிவுபடுத்தி விட்டு ஓர் இனம் தலையெடுத்துவிட முடியாது. நாம் இத்துணைக் காலமும் நம்மை மறவாமல் இருப்பதற்கே மொழி ஒன்றுதான் பெருங் கரணியக் கருவியாகும். தமிழ்மொழி பெரியாருக்குத் தேவையில்லை. நமக்குத்தேவை. வளர்ந்து வரும் இளைஞர்களுக்குத் தேவை. ஆங்கிலத்தை நாம் என்றும் புறக்கணித்ததில்லை. ஆங்கிலம் நம் புறக்கண்ணானால் தமிழ்மொழி நம் அகக் கண்ணாகும்; அறிவுக்கண்ணாகும். இந்தக் கண்ணைக் குருடாக்கி விட்டு நாம் எத்துணையளவு சுடர்விடும் புறக்கண்ணைப் பெற்றுக் கொண்டாலும் அது பயன்படாது. எனவே மொழித் துறையில் திரு. கருணாநிதி

அவர்களின் அமைச்சரவை பெருமளவில் வெற்றி பெற்றே ஆகல் வேண்டும். அண்ணு அவர்கள் செய்யத் தவறிய மொழி முன்னேற்ற மெல்லாம் கருணநிதி அமைச்சரவையால் செய்யப்பெற்றே யாகல் வேண்டும். நம் தாயைப் பழித்து விட்டு நம்மையெல்லாம் அண்ணன் தம்பிகளாகக் கருதிக் கொள்ளச் செய்துவிட முடியாது. நம்மை ஓரின மாக்கிக் கொள்ள முடியாது. முடியவே முடியாது. ஆகவே கல்லூரிக் கல்வி, அறிவியற்கல்வி அத்தனையும் தமிழாக்கித்தீரல் மிகவும் இன்றி யமையாததாகும்.

அடுத்து, நம் இன இழிவு துடைக்கப் பெற்ருக வேண்டும். நம்மை யெல்லாம் குலப் பெயர்களால் இழிவு படுத்தி வைத்துள்ள ஆரியப் பார்ப்பனக் கொள்கை அறவே அகற்றப் பெறுதல் வேண்டும். தமிழைத் தாய்மொழியாகக்கொண்டவர் அத்தனைப்பேரும் 'தமிழர்' என்றே குறிக் கப் பெறுதல் வேண்டும். பறையன், பள்ளன், பிள்ளை, முதலி, செட்டி முதலிய குப்பை கூளங்களையெல்லாம் குழிதோண்டிப் புதைத்தாகல் வேண்டும். மாந்தன் நிலா மண்டிலத்தை எட்டிப்பிடித்த காலத்தும் நாம் இப்பெயர்களைச் சூட்டிக் கொண்டும், இன இழிவுகள் கற்பித்துக்கொண் டும் இருப்போமானுல் நம்மைவிட மடயர்கள், இழிந்த பிறவிகள் இவ் வுலகெங்கணும் இருத்தல் முடியாது. சிற்றூர்ப்புறங்களில் இன இழிவு களின் பெயரால் நடைபெற்று வரும் கேடுகள் எழுத்திலடங்கா. திரு மணம்,இறப்பு, திருவிழாமுதலிய நிகழ்ச்சிகளில் இன்னும் இவ்விழிவுகள் கோலோச்சி வருகின்றன. அமைச்சர்களில் சிலரும் தலைவர்களில் பல ரும் இன்னும் இக்குமுகாயப் பேய்களுக்கு அடிமைகளாகவேஇருந்துவரு வதை நாம் கண்கூடாகக் கண்டு வருந்தவேண்டியுள்ளது. ஆங்காங் குள்ள கல்லூரி மாணவர்களிடையேயும் இக்குலப் பேய்கள் வலிந்து ஆட்டமிட்டு வருகின்றன. சீர்திருத்தமும், கலப்புமணமும் வாய்வலிக்கப் பேசும் இவ்வமைச்சரவையைச் சார்ந்தவரும் இக்கட்சிக் கொள்கை யினரும் பிறர்க்கு வழிகாட்டிகளாக மாறுகின்ற நிலை இன்னும் வந்து விடவில்லை. ஆயிரமாயிரமாகவும், இலக்க விலக்கமாகவும் பணத்தைச் செலவிட்டுப் பெரும் பெரும் ஆரவாரத்தோடுதான் இவர்களும் இன்ன மும் தங்கள் தங்கள் வீட்டுத் திருமண நிகழ்ச்சிகளையும் பிறவற்றையும் நடத்தி வருகின்றனர். இன்னும் இவர்களின் திருமணங்கள் ஆபட்சுபரியி லும், காண்டினென்டல் விடுதிகளிலுந்தாம் நடைபெறுகின்றனவே யன் றித் தங்களைப் பின்பற்றுபவர்கள் செய்வதைப்போல் பொது மேடை களிலும், திருமண மண்டபங்களிலும் செய்யப் பெறுவதில்லை. அண்மை யில் நாம் கண்ட ஒரு பகுத்தறிவாளரின் திருமணம் ஒன்று, விடியு விலே ஆரியச் சடங்குகளுடனும், விடிந்தபின் சீர்திருத்தத் தலைவர் ஒரு வரின் தலைமையிலும் இருமுறை நடைபெற்றதாகக் கேள்விப்பட்டு மிக

வும் வருந்த நேரிட்டது. அச் சீர்திருத்தக்காரரின் திருமணத்தில் அப் பெண்ணுக்கிடப்பெற்றிருந்த பொன் நகைகளோ ஏராளம்! மூவாயிரம் நான்காயிரம் உருபா மதிப்புக்கு மேற்பட்டதாகவே இருக்கும். இத் தகைய சீர்திருத்தம் யாருக்கு வேண்டும்? பொதுமக்களை ஏமாற்றிக் காசு பறித்துத் தாங்கள்மட்டும் செல்வச் செருக்கில் மிதந்து கொண் டிருக்கும் இக் கயமையை என்னவென்று சொல்வது? எளிமை, பகுத் தறிவு என்று பொதுமேடைகளில் பாடம்படிக்கும் இச் சீர்த்திருக்காரர் கள் தம்மை முதலில் திருத்திக்கொண்ட பின்புதான் ஊரைத்திருத்த முன்வரவேண்டும். சீர்திருத்தம் பகுத்தறிவு என்றெல்லாம் பேசித் திரி யாத மடமக்கள், கயமைச் செல்வர்கள் இதுபோல் நடந்து வருவதில் நமக்கு வியப்பில்லை; கவலையுமில்லை. ஆனால் ஊரைத் திருத்த முன்வந்து விட்டவர்கள் தாங்கள் மட்டும் திருட்டுத்தனமாக இதுபோல் நடப்பதை மக்கள் என்னவென்று நினைப்பார்கள். தம் மனைவி மக்களுக்கொன்று; பிறர் மனைவி மக்களுக்கொன்றா?

அண்மையில் நாம் நெல்லை, பாளையங்கோட்டைக்குச் செல்ல நேர்ந்தது. அங்கு இக்கால் இருக்கும் தமிழக அமைச்சர்களில் ஒருவர் மூட்டக் குடித்துவிட்டு விலைமகளிர் இருவருடன் பொதுவிடத்தில் ஆட்ட மிட்ட நிகழ்ச்சியைக் கழகப் பொறுப்பாளர் சிலர்தம் வாயாலேயே சொல்லக்கேட்டு மிகவும்வருந்தினோம். இத்தகைய பகுத்தறிவு யாருக்கு வேண்டும்? பெரியாருக்கு இந்நடை முறைகளெல்லாம் தவறில்லாதன வாகப் படலாம். ஆனால் மக்கள் மதிக்கத்தக்கனவா இவை? அற வுணர்வே, ஒழுக்கமே இம்மக்களுக்குத் தேவையில்லை என்பதை நடை முறையிலும், திருக்குறளை மேடையுரைகளிலும் கையாண்டு வருவது என்ன சீர்திருத்தமோ நமக்குத் தெரியவில்லை. அமைச்சரவையில் யார் அமரவேண்டும் என்பதற்காகப் போராடுவதன்று அரசியல். மக்களுக் காக யார் வழிகாட்டியாக வரவேண்டும் என்பதே அரசியலாக இருத் தல் வேண்டும். அறவியல் துறந்த அரசியலும் தேவையில்லை; அறிவிய லும் தேவையில்லை. பெரியாரைப் போன்றிருப்பவர்களுக்குப் பொது வொழுங்கு, தனிமாந்தநெறிமுறைகள் தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால் தமிழர்களுக்கு, நாட்டு மக்களுக்கு இவை கட்டாயத் தேவையென் பதை எவரும் மறந்துவிட வேண்டா. அண்மையில் பெரியார் அவர்கள் திருமணமுறையே தேவையில்லை என்று எழுதியதும் இத்தகையதே. 'இல்லறமென்பது நல்லற மன்று'-என்று எதிர்க்குரல் கொடுப்பதே சீர் திருத்த மாகிவிடாது. நல்ல பயிரை விளைவிக்க இறங்கும் முயற்சியில் தோல்வியுற்ற ஒருவன் உழவென்பது வேலையற்ற வேலை என்னும் குரல் கொடுத்தால் எப்படியோ அப்படித்தான் இக்கருத்தும்! பிடுங்கி எறிய வேண்டுவன களைகளே; பயிர்களல்ல. களைகளுக்கும் பயிர்களுக்கும்

வேற்றுமை யுணரமுடியாத ஒருவர் குமுகாயக் களையெடுப்பு முயற்சிக்குவருவதுவெட்கக்கேடானது. பார்ப்பான் நம்மைஅடிமையாக்கினான்; இன்றையசீர்திருத்தக்காரர்கள் நம்மைக்கயவர்களாகஆக்கிக்கொண்டு வருகின்றார்கள் என்பதும் நம் காலக்கேடே. திருவள்ளுவரையே பழித்துரைக்கும் இவர் பகுத்தறிவுக்கு நாம் மிகவும் வருந்துகின்றோம். இத்தகைய பொதுநலவுணர்வுக் கேடுகள் பாராட்டப் பெறுவதல்ல. புதிதாக அமைத்திருக்கும் அமைச்சரவை இவற்றிலெல்லாம் தன்னைச் சரிப்படுத்திக்கொள்ளுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கின்றோம்.

அடுத்து, ஆரியப் பார்ப்பனரின் நச்சுக்கொள்கையினை முழுவதுமாக உணர்ந்த நாம், அவ்வாரிய மாயையிலேயே இன்னும் சிக்கிக்கொண்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கதும் கேடானதுமாகும். பொதுவான இறைவணக்கப்பாடல் வேண்டும் என்ற காரணியத்திற்காக, பேராசிரியர் சுந்தரனார் அவர்களின் தமிழ்வணக்கப் பாடலைப் பரிந்துரை செய்தது சரி. ஆனால் அப்பாடலின் கருத்தை எடுப்பது எவ்வகையில் சரி? ஆரியம்போல் உலக வழக்கழிந்தொழிந்து சிதையாத தமிழின், சீரிளமைத்திறம் பாடுவதால் என்ன தவறு நேர்ந்துவிடும்? பாட்டு நூலில் உள்ளதுதானே. பாடங்களுக்கு வந்ததுதானே; மாணவர்கள் படித்துப் பாடஞ் செய்ததுதானே. மக்கள் மனத்தில் வேரூன்றிக் கலந்த உண்மையான கருத்தைக் கொண்டது தானே! இதனை ஏன் எடுத்தல் வேண்டும்? எடுப்பதால் ஆரியர் மகிழ்வர் என்றால், அதை மனோன்மணியம் சுந்தரனாரிடம் கூறுவதுதானே! அவர் இப்பொழுது இல்லை என்றால் அவர் உருவில், திருவில், அறிவில் எத்தனை அறிஞர்கள் இருக்கின்றனர். மறைமலையடிகளின் தமிழ்த்தாய்க் கட்டுரையில் உள்ள ஆரியத்தைக் களைய இசையாத தமிழரசு, இதனைக் களைவானேன்? பேராசிரியர் ஒருவரின் வரலாற்றுக் கருத்தை மாற்ற நமக்கு என்ன உரிமை? கையில் அதிகாரம் உள்ளதென்று கண்ணை மூடிக்கொண்டு எல்லாருடைய கருத்தையும் புறக்கணிப்பதுதான் அறிவுடைமையா? சீர்திருத்தமா? இதைக்கண்டு ஆரியர் மகிழ்வர் என்றால், இதைக்கண்டு உண்மையான தமிழர் எத்தனைப்பேர் புழுங்கிக் கொண்டுள்ளனர்? ஆரியரை மகிழ்விப்பதற்குத் தமிழனைச் சாகடிக்க வேண்டுமா? தமிழனின் மானத்தைப் பறித்தெறிய வேண்டுமா? வரலாற்றை மாற்றி யெழுதவேண்டுமா? அறிஞரின் குரல்வளையை நெறித்து ஊமையாக்க வேண்டுமா? இஃதென்ன அறியாமை! மறைந்துபோன வரலாற்றை வெளிக்கொண்டுவரச் சிலர் அரும்பாடு பட்டுக் கொண்டிருக்கையில் அதிகாரக் கண்மறைப்பால் உள்ள வர

லாற்றைப் புதைப்பதா? அதுவும் இன்னொருவர் கருத்தில் கை வைப்பதா? தேவையானால் வேறொரு பாட்டை எழுதிக் கொள்வதுதானே! பார்ப்பனரில் ஒரு சிறுவன்தானும் எதிர்ப்புத் தெரிவிக்காத இந்த அடியை நாமே வலிந்து நீக்குவது எத்துணைக் கோழைத்தனத்தைக் காட்டுகின்றது? இத்தகைய செயல்கள் தமிழனை எங்குக் கொண்டு போய் விடும் என்பதை அறியாதவர்களா நாம்? மனோன்மணியம் சுந்தரனாரின் ஆரியம் என்ற சொல் ஆரியர் கண்களையும் காதுகளையும் குத்தினால், மநுநூல் எரிக்கப்பெற வேண்டிய நூலில்லையா? பாரத இராமாயணங்கள் கொளுத்தப்பெற வேண்டிய நூற்களல்லவா? வையாபுரியின் வரலாற்றுநூல் புதைக்கப்பட வேண்டிய நூலில்லையா? இவை தமிழர்களை இழிவு படுத்துவன அல்லவா? இவற்றை ஏன் இன்னும் தமிழர்க்கிடையில் அச்சிட்டுக் கொண்டும், பரப்பிக்கொண்டும் இருக்கின்றனர்? தமிழன் பார்ப்பானைத் தழுவினால், பார்ப்பனனினும் கேடாகப் போய்விடுகின்றான் என்பதற்கு வரலாற்றில் எத்தனையோ எடுத்துக்காட்டுகள் உள. இதற்கொரு புதிய எடுத்துக்காட்டாக விருக்கும் எந்த வினைப்பாட்டையும் இவ்வமைச்சரவை செய்ய வேண்டா என்று வேண்டிக் கொள்கின்றோம்.

அஃதிவ்வாறான வினைகளைத் தன் அதிகார வல்லாண்மையால் செய்யுமானால், தமிழர்கள் இனியும் அரசியல்காரர்களை நம்பிக்கொண்டிருக்க வேண்டியதில்லை; நமக்கு எந்தக் கட்சியும் தேவையில்லை; கட்டுக்கோப்பும் தேவையில்லை ஆங்காங்குள்ள நிலைகளை அங்கங்குள்ளவர்களேதாம் கவனித்துக் கொள்ளல் வேண்டும். அவரவர்களுக்கு வரும் இழிவுகளை அவரவர்களேதாம் துடைத்தெறிய வேண்டும். நம்மை ஒன்றுபடுத்துவது எப்பொழுது? முனைவது எப்பொழுது? முறிப்பது எப்பொழுது? தமிழரில் ஓரினத்தானின் இழிவு இன்னோரினத்தானால் துடைக்கப் பெறுவதென்பது பொய். ஓரறிஞரின் கருத்து இன்னொருவனால் செயற்படுத்தப் பெறும் என்பது புளுகு. வலிந்த ஒருவன் மெலிந்தவர்களைக் காட்டிக் கொடுத்துத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் காலம் இது. ஒரு கூட்டுணர்வு தேவை என்று நம்பிக்கொண்டிருக்கும் மனம் இவ்வாறு அனல்மெழுகாய் உருகிச் சாகவேண்டியதுதான். தமிழா! உன் இழிவை நீயே போக்கிக் கொள்ள வேண்டியதுதான். இல்லையானால் தனியனாகவேனும் செத்துமடி! அந்நிலையிலாகிலும் உன் தன்மானம் காக்கப் பெறட்டும்.



திருக்குறள் தமிழ் மரபுரை.

மொழிப் பெரும் புலவர் பாவாணர் அவர்களின் "திருக்குறள் தமிழ் மரபுரை" அச்சாகிக் கொண்டு வருகிறது. பாவாணர் அவர்களின் இதுபோன்ற வெளியீடுகளுக்கும், இன்னும் வெளியிட வேண்டிய அரிய ஆராய்ச்சி நூல்களுக்கும் அரசினரின் உதவியோ, வேறெந்தப் பல்கலைக் கழகத்தின் உதவியோ அறவே இல்லை. அவ்வாறு அரசோ பல்கலைக்கழகமோ ஒப்பாரும் மிக்காருமில்லா இப்பேரறிஞர்க்கு உதவியிருக்குமாயின், இதுகாறும் எண்ணற்ற அரிய நூல்களை அவரிடமிருந்து தமிழகம் பெற்றிருக்கும். ஆனால் அத்தகைய நற்பேறு நமக்கும் வாய்த்திலை; நம் நாட்டிற்கும் வாய்த்திலை. இதுவரை அவர் வெளியிட்ட "The Primary classical language of the World" என்ற ஆங்கில ஆய்வு நூலும், "தமிழ் வரலாறு", 'வடமொழி வரலாறு', 'பண்டைத்தமிழ நாகரிகமும் பண்பாடும்', 'இந்தியால் தமிழ் எவ்வாறுகெடும்', 'வண்ணனை மொழிநூலின் வழுவியல்' ஆகிய சிறந்த நூல்களும் தமிழன்பர் தம் பெருமுயற்சியாலும், சில தமிழ் மன்றங்களின் பேருழைப்பாலுந் தொகுத்தளிக்கப்பெற்ற நன்கொடைகளைக் கொண்டே வெளியிடப் பெற்றன. இக்கால் வெளிவரவிருக்கும் "திருக்குறள் தமிழ் மரபுரை" எனும் நூலும் திருச்சி, புத்தனாம்பட்டி. தமிழ்மன்றம் தொகுத்துதவிய தொகையைக் கொண்டே அச்சாகி வருகின்றது. ஆனால் அம்மன்றம் உதவிய தொகை தாளுக்கே சரியாய்ப் போய்விட்டதாகப் பாவாணர் அவர்கள் அண்மையில் குறிப்பிட்டார். இன்னும் அச்சுச் செலவுக்கும், கட்டடச் செலவிற்கும் உருபா மூவாயிரத்தைந்நூறு வேண்டுமெனத் தெரிகின்றது. இத் தொகையினையும் யாதானுமொரு தமிழ்மன்றம் முயன்று திரட்டித் தருமானால் காலத்தால் செய்த உதவியாக அது திகழும். அன்பர்கள் முயன்று முடிப்பார்களாக.

-பெருஞ்சித்திரன்-

திருத்திப் படிக்கவும்.

☐ சென்ற இதழ் (சுவடி-6. ஓலை-12) அட்டைப்பக்க முதற்பாட்டில் 'பரதவித்தே' என்றிருப்பதைப் 'பரிதவித்தே' என்று திருத்திப் படிக்கவும்.

△ இவ்விதழில் உள்ள பிழைகளைக் கீழ்க்காணுமாறு திருத்திக் கொள்ளவும்.

பக்.	வரி.	பிழை	திருத்தம்.
8	2	மொழிப்பெறும் புலவர்	மொழிப்பெரும் புலவர்
46	7	புளமுகறும்	புளகமுறும்
49	,,	நாகரீக	நாகரிக
49	8	ஈகம்அறிந்தோம்	ஈகம்துறந்தோம்
49	12	விளங்கக்கற்றாலும்	விளங்கப்படித்தாலும்
49	ஈற்றயலடி	அவர் நாவால்	அவர் நாவில்

போலித் தமிழ்ப்பற்று

மொழிப்பெறும் புலவர்: ஞா. தேவநேயப் பாவாணர் க. மு.

உலகிற் பல பொருள்கள் போலியாகவுள்ளன. பொதுவாக, வெளிப்பார்வையில் போலிப்பொருள்களே உண்மைப்பொருள்களினும் பொலிந்து தோன்றுகின்றன. இப்பொதுவியல்பு போலித் தமிழ்ப் பற்றுளர்க்கு விலக்கன்று.

(க) அயன்மொழிப் பெயர்:

ஆரியர் வருமுன் தமிழர் பெயரெல்லாம் தூய தமிழ்ச் சொற்களாகவே யிருந்தன என்பதைச் சொல்லவேண்டுவதில்லை. அவர்வந்து ஆயிரம் ஆண்டுகட்குப் பிற்பட்ட கடைக் கழகப் புலவர் நாற்பத்தொன்பதின்மர் பெயருள்ளும் தொண்டே(ஒன்பதே)முழுமையாகவோ பகுதியாகவோ வடசொல்லாயிருந்தன. அக்காலத்தில் மொழியாராய்ச்சி இன்றுள்ள வகையிலும் அளவிலும் இல்லை. ஆரியமும் பிராகிருதமுங் கலந்த வேதமொழியும், அதனொடு தமிழ்கலந்த சமற்கிருதம் என்னும் வடமொழியும், தேவமொழியென முற்றிலும் நம்பப் பட்டன. அங்ஙனமிருந்தும் ஆரியரொடு பழகிய தமிழ்ப் புலவருள் ஐந்திலொரு பகுதியினரே வடசொற்பெயர் தாங்கினர். ஆரியர் தொடர்பு சிறிதுமற்ற நாட்டுப்புறத் தமிழர் பெயர் பெரும்பாலும் தூய தமிழ்ச் சொல்லாகவே யிருந்திருத்தல் வேண்டும். எனினும், அன்றிருந்து ககூகசு (1916)-ஆம் ஆண்டுவரை, வடசொற்கள் தமிழ்ப் பேச்சிலும் இலக்கியத்திலும் தமிழின் தொண்டை நெரியுமளவு சிறிது சிறிதாய் மேன்மேலும் தொடர்ந்து கலந்து வந்ததினால், தமிழர் பெயரும் அந்நிலைமையடைந்தன.

தமிழர்க்கு நற்காலமாக, ககூகசு-ஆம் ஆண்டு தவத்திரு மறைமலையடிகள் வடசொற்களை அறவே களைந்து, தமிழ்ப்பயிர் மீண்டும் தழைத்தோங்குமாறு செய்தருளினார்கள். அன்றிருந்து தனித்தமிழ் கல்லாப் பொதுமக்களிடையும் கடுகிப் பரவி வருகின்றது. ஆயின், இந்நிலைமைக்கு முற்றும் மாறாக, தலைமை தமிழ்பேராசிரியரும் தமிழ்க் காவலரும் தமிழ அமைச்சரும் வடசொற் பெயர் தாங்கிவருவது வியக்கத்தக்க வேடிக்கைச் செய்தியே. அவர் வடசொற் பெயர் தாம் தாங்குவது மட்டுமின்றித் தம்மக்கட்கும் பேரப்பிள்ளைகட்கும் இட்டு ஆரிய மரபை அழியாது காத்துவருகின்றனர்.

பேரா. பரிதிமாற் கலைஞன் பிராமணராயிருந்தும் தனித்தமிழ்க்கு வித்தூன்றித் தம் பெயரைத் தூய தமிழ்ச் சொல்லாக மாற்றிக்கொண்டார். தமிழ்ப்பெயர் தாங்காதவர் உண்மைத் தமிழ்ப் பற்றுள்ளவராக இருக்கவே முடியாது.

இம் மூவகையாரும், சிறப்பாகத் தமிழ்நாட்டு அமைச்சர், தாமும் தம் கான்முளையரும் தமிழ்ப்பெயர் தாங்காக் குற்றத்தை மறைக்க

ஒருவழி கண்டுபிடித்திருக்கின்றனர். அஃது அரசியல் அலுவலகங் கட்கும் தாம் தங்கியிருக்கும் கட்டிடங்கட்கும் தமிழ்ப்பெயரிடுவதே. ஐயறிவுள்ள அரிமாவும் வரிமாவும் கரிமாவும் நரிமாவும் முதலிய விலங் குகட்கும் தமிழ்ப்பெயர் சூட்டின்; அவை இம்மியும் எதிர்க்காது ஏற் றுக்கொள்ளும். அங்ஙனமிருக்க, ஓரறிவுயிருமற்ற கட்டிடங்கள் அமைதியாய் ஏற்காது என் செய்யும்? இனி, கட்டிடங்கட்குப் பெய ரிடுவதில் ஓர் ஏந்தும் (வசதியும்) உள்ளது. விலங்காயின், அவற் றின் கழுத்திற் கட்டித் தொங்கவிட்ட பெயர்ப் பலகைகளைச்சிதைத்து விடலாம் அல்லது எங்கேனும் வீழ்த்திடலாம். கட்டிடங்களோ பெரு மழை பெய்தாலொழியப் பெயர்அழியப்பெறு; நிலநடுக்கம் உண்டானா லொழியப் பலகை சிதையப்பெறு

இனி, நகரப்பேரியங்கிகளில் திருக்குறள் எழுதிவைப்பது அல் லது திருக்குறட் பலகை ஆணியறைந்து வைப்பதும், திருக்குறள் அறிவையோ தமிழ்ப்பற்றையோ அவற்றில் ஏறிச்செல்வார்க்கு உண் டாக்கிவிடாது. முன்னும் பின்னும் நிற்கும் அல்லது இருக்கும் ஆள் தெரியாவாறு சிறிதுநேரம் நெருக்கி நின்று, இறங்குமிடம் சென்று சேர்வதைக்கவனிப்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்து ஏந்தாகச் சீட்டுவாங்கவும் இயலாத வழிப்போக்கர், திருக்குறட்பலகை யிருக்கு மிடங்கண்டு வாசித்து அதன் பொருளுணர்ந்து அதன்படி நடப்பர் என்பது, வெண்ணெய்தடவிக் கொக்குப்பிடிப்பதை நம்புவதினுங் கேடானதே.

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

என்னுங் குறளைப்படித்துப்பொருளுணர்ந்திருந்தால், சென்ற ஆண்டு மாணவர்க்கும் சென்னைமாநகரப் பேரியங்கித் தொழிலாளர்க்கும் இடை நிகழ்ந்த சச்சரவு நேர்ந்தேயிராது. குறள்நெறியைக் கைக் கொள்ளாமற் குறளைப்பார்த்தால் மட்டும் போதுமெனின், ஒவ்வொரு கட்டிடத்திலும் சுவருக்கொரு குறளோ குறளதிகாரமோ எழுதி, சிறு கட்டிடங்களில் ஓரியலையும் பெருங்கட்டிடங்களில் ஓரிருபாலையும் மாபெருங்கட்டிடங்களில் முப்பாலையும் முடித்து விடலாம். மேலும், தனிப்பட்டவர் பேரியங்கிகளிலும் மாட்டுவண்டி குதிரைவண்டிகளி லும் ஒவ்வொரு குறள் அட்டை தொங்க விடலாம்.

திருவள்ளுவர் கள்வெறியைக் கண்டிப்பதுபோன்றே கவறுட் டையுங் கண்டிக்கின்றார். கவறுட்டுத் தன்மையுள்ள சீட்டாட்டெல் லாம் கவறுட்டே.

(உ) கலவைநடைப்பேச்சு:

இற்றைத்தமிழிற் கலந்துள்ள அயன்மொழிச் சொற்களெல்லாம் ஒவ்வொரு சொல்லாகத் தமிழிற் புகுந்தவை அல்லது புகுத்தப்பட்ட வையே. அவை புகுத்தப்படுமுன் அவற்றால் இன்று வழக்கு வீழ்த்தப்

பட்டுள்ள தூய தமிழ்ச் சொற்களெல்லாம் எல்லார்க்கும் எளிதாய்ப் பொருள் விளக்கினவே. அவற்றின் இடத்தில் இன்று எளிதுணர் பொருட்சொற்கள்போல் வழங்கும் அயற்சொற்களும் தொடக்கத்தில் அரிதுணர் பொருட்சொற்களாயிருந்தனவே. ஆதலால், எளிய வழக்குச் சொற்களை நீக்கிவிட்டு அரிய வழக்கற்ற சொற்களைப் புகுத்துதல் கூடாதென்று கூறுவார், அறிவாராய்ச்சி யில்லாதவரும் தமிழ்ப் பகைவருமே யாவர். ஒருநாளுக்கு ஓர் அயற்சொல்லை விலக்கினாலும் ஓரீராண்டிற்குள் ஒருவர் தனித்தமிழ் பேசப் பயின்றுகொள்ளலாம். ஒவ்வொருவரும் நூற்றிற்குநூறு தூய்மையாகப் பேசாவிடினும் இயன்றவரை பேசினாற்போதும்!

(௩) வழுநடைப் பேச்சு:

இனி, தூய தமிழையும் இலக்கணப் பிழையின்றித் திருந்திய வடிவிற் பேசுவதே கற்றோர்க்கழகாம்.

"கல்விக்கழகு கசடற மொழிதல்," என்றார் அதிவீரராமபாண்டியர். "பண்டைக் காலத்திற் குமரிநாட்டிற் பொதுமக்களும் திருத்தமாய்ப் பேசிவந்தனர்.' இன்று புலமக்களும் பிழையின்றிப் பேசுவதில்லை. கொச்சைத் தமிழை விரும்பும் காமில் சுவலெபில் என்னும் செக்கோசிலோவக்கியத் தமிழறிஞரும் தம் 'தமிழ்வரலாற்றிலக்கணச் சொற்பொழிவுகள்' (Lectures on Historical Grammar of Tamil) என்னும் ஆங்கிலச் சுவடியில், "எழுத்திற்கும் முறைப்பட்ட பேச்சிற்கும் பயன்படுத்தப்பெறும் இலக்கிய நடைத் தமிழை, தமிழ்நாட்டுத் தலைசிறந்த கல்வியாளரும் வழக்கமான உரையாட்டில் ஒருபோதும் கையாள்வதில்லை. பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் தம் மனைவியாரொடு அல்லது மக்களொடு பேசும்போது 'சொல்கிறேன்' என்று சொல்வதில்லை, 'சொல்றேன்' என்றே சொல்கிறார். தமிழ் எழுத்தாளர் ஒருவர் தம் நண்பரொடு பேசும்போது, 'இல்லாவிட்டால்' என்ற வடிவத்தையன்று, 'இல்லாட்ட' என்ற வடிவத்தையே பயன்படுத்துகின்றார்." (பக்-௫-௬) என்று இற்றைத் தமிழ்ப் பேராசிரியரையும் எழுத்தாளரையும் பழித்திருக்கின்றார். வழுநடையைப் போன்றே இலக்கண நடையும் வழக்கமாயின் எளிதாவதே. சில சொற்களின் வழுவடிவம் உண்மையில் திருந்திய வடிவத்தினும் பலுக்கல் (உச்சரிப்பு) அரிதாயிருக்கும். ஆயினும், வழக்கங் கரணியமாக எளிதாக வாய்க்குவரும். எடுத்துக்காட்டாக, தஞ்சை வட்டாரத்தில் எண்பது என்னும் சொல்லின் எம்பழது என்னும் திருந்தா வடிவம் எளிதாக வழங்குதல் காண்க.

(௩) சென்னைத் தமிழ் அகரமுதலித் திருத்தம்:

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலி, வேண்டுமென்றே தமிழ் சமற்கிருதத்தின் கிளை என்று அயலார் கருதுமாறு, தமிழ்ப்

பகைவரான பிராமணத் தமிழ்ப் புலவரால்; ஆதி வையாபுரியாரைத் துணைக்கொண்டு திட்டமிட்டுத் தொகுக்கப்பட்டுள்ளது.

இதில், அக்கை, அச்சன், அச்சு, அப்பம், ஆப்பம், அம் (ஆம், அம்பு) அம்பலம், அரக்கு, அரங்கு (அரங்கம்), அரசு (அரசன்), அரத்தம், அவை(அவையம்) ஆசிரியன் (ஆசிரியம்) ஆணி, ஆயிரம் இலக்கணம், இலக்கியம். உவணம் (சுவணம்), உவமை, உரு (உருவு, உருபு, உருவம்), உலகு (உலகம்), ஐயன் முதலிய ஆயிரக்கணக்கான அடிப்படைத் தமிழ்ச் சொற்கள் ஆரியச் சொற்களாகக் காட்டப்பட்டுள்ளன. பேரா. பரோ, பேரா. எமெனோ ஆகிய மேனாட்டுப் பேராசிரியர் இதை அடிப்படையாகக் கொண்டதினாலேயே, தம் திரவிட ஒப்பியல் அகரமுதலியையும் குன்றக் கூறலாகவும் வழுப்படவுந் தொகுத்துள்ளனர். இந்தி தமிழ்நாட்டிற் புகுவதற்கும் கடந்த ஈருலகத்தமிழ் மாநாடுகளும் தமிழ்ப்பழிப்பு மாநாடுகளாக முடிந்தமைக்கும், சென்னைப் ப. க. க. த. அகரமுதலியே காரணியம். இதைத் திருத்துமாறு தி. மு. க. அரசிற்கு எத்துணையோ தமிழ்ப் பேராசிரியரும் தமிழ் மன்றங்களும் எத்துணையோ முறைவேண்டியும், அஃதுஇம்மியும் பொருட்படுத்தவில்லை.

சென்னைப் ப. க. க. த. அகரமுதலித் திருத்தத்தினும் தமிழ் வளர்ச்சிக்கு இன்றிமையாதது செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பு. இதுபற்றிப் பர். (Dr) மெ. அழகனார் (சுந்தரம்) தி. மு. க. ஆட்சி ஏற்றவுடனேயே அறிஞர் அண்ணாதுரையிடம் எத்துணையோ எடுத்துச் சொல்லியும், அவர் செவிசாய்த்திலர்.

(௪) கடந்த உ-ஆம் உலகத் தமிழ்மாநாடு தமிழ்நாட்டுத் தலைநகரில், மறைமலையடிகள் வாழ்ந்த இடத்தில், நடந்தும் கோலாலம்பூர் மாநாட்டை விடக் கேடாக முடிந்தது. மறைமலையடிகள் வழியினர் விலக்கப்பட்டனர். வங்கநாட்டுப் பிராமணர் மொழித்துறைத் தலைவராயினர். தில்லியில் நடுவணாட்சித்துறையைச்சேர்ந்த பிராமணரொருவர், தமிழெழுத்தும் தொல்காப்பியமும் அசோகன் கல்வெட்டிற்குப்பின் கி. மு. உ-ஆம் நூற்றாண்டில் தோன்றினவென அச்சிட்ட கட்டுரை படித்தார். பிரெஞ்சுக்காரரொருவர்; பண்டைக்காலத்தில்சமற்கிருதமே இந்தியப் பொதுமொழியாயிருந்ததென்றும், அதன்வழி வந்ததே தமிழென்றும்; கட்டுரை படித்தார். திரு. காமில்சுவெலபிலார் மறைமலையடிகளையும் நாவலர் சோமசுந்தர பாரதியையும் புரட்சிப்பாவலர் பாரதிதாசனையும் மொழித்துறைப் பண்பாடற்றவராக வன்மையாகக்

கண்டித்த கட்டுரையொன்றை அச்சிட்டு வழங்கினர். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகத் தலைமைத் தமிழ்ப்பேராசிரியரும் இதைத் தடுக்கவில்லை. தமிழரசும் கண்டிக்கவில்லை. மாநாடு பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே நடைபெற்றது.

(௬) தமிழ்நாட்டு அரசினர் பேரியங்கிப் போக்குவரத்துத்துறை வண்டிகளிலும் அலுவலகங்களிலும், தமிழ்க் கூட்டுச்சொற்களும் தொடர்களும் புணர்ச்சிப் பிழையாக எழுதப்பட்டுள.

(௬) கல்லூரிகளிற் கற்பிக்கப்படும் அறிவியல் துறைப் பாடங்கட்குரிய குறியீடுகள் முற்றும் தனித்தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை

(எ) வழக்கற்றுவரும் தமிழ்ச் சொற்களைத் தொகுக்கவும், இசை நாடகம் கணியம் மருத்துவம் முதலிய துறைக்குறியீடுகளை ஆரியர் வருமுன்னிருந்ததுபோல் தூயதமிழாக்கவும். கோயில் வழிபாட்டைத் தமிழில் நடைபெறுவிக்கவும், இன்னும் ஒரு முயற்சியும் செய்யப்பெறவில்லை. ஆயினும் தமிழ் அரியணை யேறிவிட்டதாகச் சொல்லப்படுகின்றது.

(அ) தனித்தமிழ் ஆராய்ச்சி நூல்கட்கும் தமிழ் வரலாற்று நூற்கும் தனித்தமிழ் ஏடுகட்கும் அரசியலுதவி ஒரு சிறிதுமில்லை.

(௯) மறைமலையடிகளார் வழியினர் தமிழ்த்தொண்டு செய்ய ஆவலாகக் காத்திருந்தும் அவர் புறக்கணிக்கப்பட்டு, அவர் இருக்கவேண்டிய இடத்திற்கு அரைகுறையான தகுதியுடையவரே அமர்த்தப்படுகின்றனர்.

(௧௦) தமிழின் பெயரால் அரசியற்கட்சி வளர்க்கப்படுகின்றதேயொழிய, தமிழ்வளர்ச்சிக்கான தகுந்தவழி ஏதும் கையாளப்பெறவில்லை.

இவற்றையெல்லாங் கவனியாது இந்தியெதிர்ப்புக் கூட்டங்கள் நடத்துவதும் திருவள்ளுவர் ஈராயிர ஆண்டுவிழாபற்றி அறிக்கை விடுவதும், வணிகவளர்ச்சியும் பெயர் விளம்பரமும் நோக்கியனவேயன்றி வேறல்ல. அயன்மொழிப் பெயரை மாற்றாது தமிழ்ப்பற்றுக் காட்டுவதெல்லாம், பெற்றோர்க்கு ஓரளவு உதவினும் அவரைப் பிறரிடத்து மற்றோராகக்காட்டி மறைப்பது போன்றதே.

நூறாசிரியம்

துரை-மாணிக்கம்.

பாட்டு: கஎ

திமிர்தல் தவிர்ந்தன தோழி நிமிர்பின்றி!
துமிந்து மின்னோடி முகிலுங் கருமுற்றி
மழைபொழிந்து மண்பனிப்பத்
தழைபரப்பி உழைவருந்தி
மோத்தை புறங்கவிழக் கடமை மறியீன்று
ஊத்தை நாக்கொடு நக்கி உளமூறி
உண்ணிய வம்மினெம் மக்கா ளென்ன
வுட்கிடை யுணர்த்த, உள்ளுவந் தோடி
முன்னிளங் காலுறப் பின்கால் எவ்வி
முட்டச் சுரக்கும் முகிழ்முலைக் கென்றன்
கட்டிக் கிடக்கும் கவின்முலை தாழ்ந்தே!

பொழிப்பு:-

மதர்ப்பு தவிர்தலாயின தோழி, நிமிர்தலின்றி! தூறலைச் செய்து மின்னல் ஓடி, முகில்கள் கரு முதிர்ந்து மழையைப் பொழிவித்து நிலத்தைக் குளிர்விப்ப, தழைகளைப் பரப்பிப் புறத்திருந்து வருத்தமுறும்படி ஆட்டுக்கடா முகந்திருப்பிக் கவிழ்ந்து கொள்ள, பெண் ஆடு குட்டிகளை ஈன்று தந்து, கருவுயிர்ப்பு நீரை நாக் கொண்டு நக்கித் தூய்மைசெய்து, உளத்தே தாய்மை யுணர்வு ஊறியதாய் "பால் உண்ணுதற்கு வாரீர் எம் மக்காள்!" என்னத் தன் உள்ளக் கிடக்கையை உணர்த்துதல் செய்ய, அக் குட்டிகள் உளமகிழ்ந்து அதனருகில்ஓடி, இளமையான முன்னங் கால்களை நிலத்தே படிதலுற ஊன்றி, பின் கால்களால் எவ்வுதல் செய்து, தம் புனிற்றிளந்தலைகளான் செய்கின்ற, அம் முட்டுதலுக்குச் சுரக்கின்ற அப்பெண் யாட்டின் முகிழ்த்த முலைகளின் தகைமைக்கு வறிதே கச்சையான் கட்டப்பெற்றுக் கிடக்கும் கவின் தோய்ந்த என் முலைகள் தாழ்வுற்றவாக.

விரிப்பு.

இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

அழகும் இளமையும் வாய்ந்தாள் ஒருத்தி, தாய்மை யெய்தாத தன் உறுப்பு நலன் அழியக் கூறி, தனக்கு வந்து வாயாத பிள்ளைப் பேற்றுக்கு ஏங்கி வருந்தி நகைத்துக் கூறியதாகும் இப் பாட்டு.

பிள்ளைப் பேற்று நலன் ஒன்றின் பொருட்டாகவே வாய்க்கப் பெற்றிருக்கும் அழகுசான்ற முலைகள், அப்பேறு வாயா விடத்து வறிதே கட்டுப்பெற்று மதர்த்துப் பொங்கி யெழுந்து அண்ணாந்து நிற்றல் எற்றுக்கோ எனத்தம் மதர்ப்பு தவிரவும் ஏமாப்பு தாழ்வுறவும் செய்தன என்றவாறு.

பெண்மை முற்றித் தாய்மையாய்க் கனியாத விடத்து அத் தாய் மைக்கே உரிய சிறப்புறுப்பாகிய முலையின் கவின் மிக்க நிமிர்பு நாணுத்தரத் தக்கதாகும் என அத் தலைவி நெஞ்சழிந்தாள். ஆகவே அவள் நெஞ்சழிவுக்குத் தக்கவாறு அவ்வுறுப்புகளும் பொங்குதல் தவிர்தலும், நிமிர்தல் தாழ்தலும் செய்தன என்க.

கட்டுதலுற்றுக் கிடக்கும் கவின் முலையின் தன்மையினை இது காறும் நினையாளாய் நின்ற தலைவி தன் இற்புறத்தே குட்டிகளை ஈனுதலுற்று உளமுவந்து அவற்றைப் பாலுண்ண அழைத்த பெண் யாட்டையும், அதனருகே ஓடித்தம் தலைகளான் தாயின் மடியினை முட்டுவித்துப் பாலருந்தும் மறிகளையும் கண்டு, தன் பெண்மை நலம் தாய்மையாய்க் கனியாது காய்கின்றதுணர்ந்து, நெஞ்சு அழுங்க, அருகே நிற்குந் தோழியை விளித்துத் தன் ஆற்றாமை தோன்றக் கூறினாள் என்க.

திமிர்தல். விம்முதல், புடைத்தல், பெருகுதல், எனப் பொருள்படும்.

இனி, திமிர்தல் என்னுஞ் சொற்குப் பூசுதல், அப்புதல் என்றும் பொருள் கொண்டு, மார்பகத்தே பூசப்பெறுவனவாகிய சந்தனக்குழை முதலிய விரைப் பொருள்கள் பூசுதலைப் பெறாது தவிர்க்கப் பெற்றன என்றும் கொள்ளலாம். எனினும் செயற்கைப்புனைவு சாரும் பின்னைப் பொருளினும் இயற்கைநலஞ் சார்ந்த முன்னைப் பொருளே சாலப் பொருந்துவதாம். என்னை? நாணுடைமை பற்றியாம் என்க.

தவிர்ந்தன: தவிர்தலாயின.

நிமிர்பின்றி: விறைப்பின்றி, ஏமாப்பின்றி, அண்ணாத்தலின்றி.

துமிதல்: தூறுதல், சிறுமழை பெய்தல், துளி—துமி.

மின்னேடி . . . . மண் பனிப்ப: தொடக்கத்தே தூறலாகிப் பின் வலித்து மழையாகப் பெய்ததால் நிலம் குளிர்ந்தது என்க.

முகில் கருமுற்றிப் பொழிதல்: முகில் மழைத்துளி நிரம்புதல் கரு முற்றுதல் போலாம் என்க. மழை பொழிதல் கரு உயிர்த்தலைப் போலாம் என்க. இனி, வினை அடிப்படையின்றி நிற வடிப்படையாலும் பொருள் கொண்டு, முகில் கருநிறம் நிரம்பிப் பொழிதலுற்றது என்றுங் கொள்ளலாம்.

மண்பனிப்ப: நிலம் குளிர்மை யெய்த.

மோத்தை தழைபரப்பி உழைவருந்திப் புறங்கவிழ: பெண்ஆடு குட்டி ஈனுவதற்கென, ஆண் ஆடு இலை தழைகளைக் கொணர்ந்து நிலத்தே பரப்பி, ஒரு புறத்தே இருந்து வருந்தி முகங்கவிழ்ந்து நின்றதாம் என்க.

பெண் ஆடு கருவுயிர்த்தலைத் தான் காணக்கூடாதென ஆண் சிறிது தொலைவில் நின்று தலை கவிழ்ந்து கொண்டது. பெண் கருவுயிர்க்குங்கால் படுந்துயர் ஆணுக்குந் துயரை வருவித்தது, அது தன் பிணையின்மேல் வைத்த அன்பால் என்க. மோத்தை ஆண்ஆடு.

கடமை: பெண் ஆடு.

மறி: குட்டி.

ஈனல்: கருவுயிர்த்தல்.

ஊத்தை: கருவுயிர்ப்பு நீர்; குட்டியைப் போர்த்துள்ள வழவழப்பான கருநீர்.

ஊத்தை நாக்கொடு நக்கி உளமூறி: குட்டிகளின் மேலுள்ள கருவுயிர்ப்பு நீரைத் தன் நாவைக்கொண்டு நக்கித் தூய்மை செய்தது பெண். அவ்வாறு செய்யச் செய்ய அதன் உள்ளத்தே தாய்மை உணர்வு ஊறி நின்றது என்க.

உண்ணிய வம்மின் ....உணர்த்த: ஊத்தையைத் தூய்மை செய்த பெண் ஆடு குட்டிகளைத் தன்னிடம் வந்து பாலருந்துமாறு தன் உள்ளத்தின் விழைவு தோன்ற விளித்தது என்க.

தாய் தம்மைப் பாலுண்ண அழைத்ததும் குட்டிகள் உள்ளம் உவந்து ஓடின என்றவாறு.

முன்னிளங் காலுறப் பின்கால் எவ்வி: முன்னங்கால்கள் நிலத்தே உறும்படி வைத்துப் பின் கால்களால் உந்தி எக்குதல் செய்து.

முட்ட: முட்டுதல் செய்ய. குட்டிகள் தாயிடம் பால் அருந்துங் கால் தம் இளந்தலையால் மடியை முட்டிமுட்டி முலைத்தசையுள் பால் மிகுந்து சுரக்கும்படி செய்வது இயற்கை.

முட்டச்சுரக்கும் முகிழ் முலைக்கு: குட்டிகளின் இளந்தலை முட்டு ல் செய்தலால் சுரக்கின்ற முகிழ்த்து நிற்கும் முலையினுக்கு.

என் கட்டிக்கிடக்கும் கவின்முலை தாழ்ந்தே: வறிதே கட்டப் பட்டுக் கிடக்கின்ற அழகு பொருந்திய என் முலைகள் தாழ்ந்தனவாக.

ஆட்டின் முலை பால்சுரந்து, கூம்பித் தோன்றுவதால் முகி முலை எனலாயிற்று. அவ்வாறு குழவி வாய் வைத்தலும், அதனால் முலை சுரக்கப் பெறுதலும், மலர்ச்சியுறுதலுமின்றி வறிதே கிடத்த லால் கவின்முலை எனலாயிற்று. பயனில்லதாய வெறும் அழகு சிறப் பிழந்ததாகையால் அஃது இழித்துக் கூறப்பெற்றதென்க.

ஐயறிவே வாய்க்கப்பெற்ற விலங்கினங்கள்கூடத் தாய்மை எய்துதலும் அதனால் மகிழ்தலுமாக இருக்கையில், ஆறறிவு பெற்று ளாகிய தான் தாய்மைநலம் எய்தாளாக மலட்டுத்தன்மை வாய்ந் திருப்பது தலைவிக்கு மிகுதுயரை வருவித்ததாம் என்க.

எத்துணைதான் பெண்மை நலம் வாய்ந்தாளாக விருப்பினும் ஒருத்தி பிள்ளைப் பேறின்றி இளமையழிதல் மிகவும் வருந்துதற்குரி யது. அவள் அழகும் இளமையும் சிறப்புப் பெறுவன அல்ல-என்ற வாறு.

பொருந்தாக் காமத்துப் போதரும் பிற கருச் செய்திகள் யாவும் தலைவன் தலைவியரின் காதல் தொடர்புடையனவாக மட்டும் இருப்ப, இது தமிழிலக்கியத்துப் புதுக் கருத்தாக நிற்றலோடமையாது, தலை வன் தலைவிக்குற்ற இணைப்பு பொருத்த மற்றதாகி, இவளை மலடாக் கியது பற்றி, இதுவும் பொருந்தாக் காமத்துள்ளேயே அடக்கப்பெற்ற தென்க.

இப்பாட்டு பெருந்திணையும் இல்லவைநகுதலென் துறையு மாகும்.

கல்வியமைச்சர் பார்வைக்கு.

கல்லூரிகளில் மொழிப்பாடம்.

பர். வ. சுப. மாணிக்கனார், மு. க., கீ. க. மூ.

(மடல்வடிவான இக்கருத்துரை, கட்டுரைவடிவாகத் தரப்பெறுகின்றது)

கல்லூரிகளில் மொழிப்பாடம் புகுமுக வகுப்பளவில் முடிவடைய வேண்டும் என்ற கருத்தினை முன்னாள் கல்வியமைச்சர் வெளியிட்டதை இருமுறை செய்தித்தாள்களில் படித்தேன். கல்வித்துறையகத்தையும் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களையும் புகுமுகவகுப்போடு மொழிப்பாடம் முடியுமாறு திட்டம் கோலும்படி அவர் கேட்டிருப்பதாகவும் படித்தேன். பட்டப் படிப்பு வகுப்புகளில் மொழிப் பாடங்களையும் மாணவர்கள் படிக்கவேண்டி யிருப்பதால், அவர்களால் அறிவியல் படிப்பில் முழுக்கவனம் செலுத்த முடியவில்லை என்பது அவர் கருத்து எனவும் செய்தித்தாளில் அறிந்தேன்.

பட்டப்படிப்பில் மொழிப்பாடம் வேண்டா என்றால், பகுதி-1 ஆங்கில மொழிப்பாடமும் வேண்டா என்பது கருத்தாகுமோ? என்பது தெளிவுபடவில்லை. ஆனால் இரண்டாம் பகுதி மொழிப்பாடம் - தமிழ் முதலான மொழிகள் பட்டப்படிப்பில் வேண்டா என்பது தெளிவாகின்றது.

பட்டப்படிப்பில் வடமொழி இந்தி முதலியவற்றை இரண்டாம் பகுதியாகக் கற்கும் மாணவர் எண்ணிக்கை தவச்சிறிது. தமிழகத்தின் மூன்று பல்கலைக் கழகங்களிலும் பி. ஏ., பி. சயி., பட்டவகுப்பில் ஏறக்குறைய இருபதினாயிர இளைஞர்கள் தமிழை இரண்டாம் பகுதியாகக் கற்று வருகின்றனர். பட்ட வகுப்பில் மொழிப்பாடம் வேண்டா என்றால் தமிழ்ப்பாடம் வேண்டா என்பதுவே அதன் நேர்பொருள், என் அனைய தமிழ் நண்பர்கள் பட்டத் தமிழ் நீக்கம் பற்றிய கருத்தினை உரியகாலத்தில் வரைவது பொறுப்பும் சால்பும் ஆம்.

தமிழ்வளர்ச்சி, கல்விக்கொள்கை பற்றிய பல்வேறு கருத்துகளை இங்கு நான் விரித்தெழுதவில்லை. என்றாலும் அவற்றையெல்லாம் ஒருபுடை மனத்துக்கொண்டே, பட்டவகுப்பில் பகுதி-2 தமிழ் அகற்சி பற்றி என் கருத்தினை எழுதுவல்.

1. பட்டவகுப்புவரை மூன்றும் பகுதித்துறை யெல்லாம் எல்லார்க்கும் தமிழ் வாயிலான பின்னரே, இரண்டாம் பகுதித் தமிழ்

வேண்டுமா? என்பது ஆராய்ச்சிக்கு உரியது. பல்லாண்டுகள் முயன்றும் கல்லூரிகளில் துறைப்பாடங்களில் இன்னும் மனநிறைவாக ஒரு விழுக்காடுகூடத் தமிழ் பயிற்றுமொழியாக வில்லை. புகுமுக வகுப்பிலும் பட்ட வகுப்பிலும் ஒருசில கலையியல் துறைகளில் மாற்றுப் பயிற்று மொழியாகக் கொண்டு வந்திருக்கின்றோம். அஃது எதிர்ப்புக்கிடையே சிறப்புப்பெற எத்தனை ஆண்டாகுமோ? அறிவியல் துறைகள் தமிழை என்று ஏற்றுக்கொள்ளுமோ? தொழிற் கல்லூரிகளுக்குள் தமிழ் நடக்க எவ்வளவு தலைமுறையாகுமோ? வானநடை பெருது தமிழ் கால்நடையாகவே தள்ளாடுமோ? இவ்வச்சம் நடைமுறையில் ஏற்படுகின்றது. இந்நிலையில் அரசனை நம்பிக் கணவனைக் கைவிடலாமா? என்ற பழமொழியை நினைப்போமாக.

2. மூன்றும் பகுதித்துறையெல்லாம் தமிழாக வேண்டும் அவற்றுக்கு உரிய பெருநூல்களை எழுதவேண்டும், மொழிபெயர்க்க வேண்டும் என்று எண்ணுகின்றேமே: இத்துறைத் தமிழ் நூல்கள் எழுதுவார் யார்? புகுமுக, பட்ட, மேற்பட்ட வகுப்புக்களுக்கு நூல் எழுதவல்ல தமிழ் வல்லார் யார்? எல்லாத் துறைகளும் பட்டவகுப்பு வரையேனும் தமிழாக வேண்டுமேல், மேற்பட்ட வகுப்புகளிலும் ஓரளவு தமிழ் வைத்தாக வேண்டும். ஏன்? மேற்பட்டம் பெற்றவர்களே பட்டவகுப்புகளுக்குத் துறைநூல் எழுத முடியும். இங்ஙனம் மேற்பட்டப் படிப்பாளர்க்கும் ஒருபகுதி. தமிழ் வைத்துப் பயிற்று மொழிக் கொள்கையை வலுப்படுத்துவதற்கு மாருக, முதற் பட்டப் படிப்பாளர்க்கு உள்ள தமிழையும் அகற்ற நினைப்பதா? பட்டத்தமிழை அகற்றின், புகுமுக வகுப்புத் தமிழும் தேய நாளாகாது. உயர்நிலைப்பள்ளியிலுங்கூடத் தமிழை அகற்றக் கல்வியாளர் காரணங் கூறுவர். தமிழ் பயிற்று மொழிக்கதை சாணேற முழம் வழுக்குதலாகிவிடும். பயிற்றுமொழி யாகாவிட்டாலும் தமிழ் தமிழாக இருந்தாற்போதுமே. ஆதலின் பயிற்றுமொழிக் கொள்கையில் உறைப்புடையவர்கள் புகுமுக வகுப்பிற்கும் மேற்பட்ட வகுப்பிற்கும் இடைப்பட்ட பட்டத் தமிழை நீக்கவோ சிறிதும் குறைக்கவோ செய்யார்கள்.

3. மதுரைப் பல்கலைக்கழகம் இவ்வாண்டு முதல் ஒவ்வொரு பட்டத்துறைக்கும் சிறப்புத்துறை (Special) என்ற புதுவகுப்பைக் கொண்டுவந்து தமிழ்க்காலத்தைக் குறைத்திருப்பதோடு, தமிழிலக்கியத்தை அறவே பாடத்திலிருந்து நீக்கிவிட்டது. இச்சிறப்புத்துறை தமிழுக்கு இறப்புத்துறையாகும். மேலைநாடுகளில் மேற்படிப்புகளில்

மொழிப்பாடம் எல்லார்க்கும் இல்லையே, என்ற கல்விக்கொள்கை நம் நாட்டிற்குப் பொருந்தாது. ஏன்? அந்நாடுகளில் துறைப்பாடங்கள் அயல் மொழியிலா உள்ளன? அங்கு துறையும் தாய்மொழியும் பிரிக்க முடியா நிலையில் வாழும் உயிர்மெய்யாக உள்ளன. முன்னேறிய நாடுகளில் காணப்படும் உயிரான கல்விநெறி என்ன? எத்துறைக்கும் எவ்வகை மேனிலைப்படிப்புக்கும் தாய்மொழி பயிற்றுமொழியாக இருப்பது. இந் நெறிப்படி நம் பல்கலைக்கழகங்களிலும் துறையெல்லாம் தமிழாகிவிடட்டும். விட்டபின்றை, இரண்டாம்பகுதித்தமிழ் வேண்டுமா? என்று எண்ணுவோம். முதல் நெறியை மேற்கொள்ளாது கைவிட்டுவிட்டு, அதன்மேல் எழுந்த பிற கல்விநெறிகளை மட்டும் மேற்கொள்ள முயல்வது குருடனுக்குக் கொடுத்த கண்ணாடி ஒக்கும். துறைப்படிப்பு பிறமொழியில் இருக்கும்வரை, உள்ள இலக்கியப் பொதுத் தமிழையும் ஒழித்துவிடலாகாது. இத் தமிழ் ஒழிவு பல ஒழிவு அழிவுகளாகிவிடும்.

4. ஆண்டுதோறும் பட்டவகுப்பில் இரண்டாம் பகுதியாக இருபதினாயிரம் தமிழிளைஞர்கள் தமிழைக் கற்று வருப. உணர்ச்சிக்கு அறிவுப் பற்றுக்கோடு வேண்டும். பல்லாயிர இளநம்பிகளின் இன்றைய தகுமுணர்ச்சிக்கு அவர்கள் பெற்றுள்ள தமிழ் இலக்கிய அறிவே பற்றுக்கோடு. பட்டவகுப்பிற்றான் நல்ல தூய கழக இலக்கியங்கள் பாடமாக இலங்குகின்றன. புகுமுக வகுப்போடு தமிழ் நிறுத்தப்படும் என்றால், தமிழ் எனப்படும் அக இலக்கியங்களைப் படிப்பார் யார்? புகுமுக வகுப்பிற்குக் கழகப் பனுவல்களைப் பாடமாக வைக்கலாம் என்றாலோ, புகுமுக மாணவப்பருவம் நடையும் பொருளும் நயனும் சிறந்த கழகச் செய்யுட்களைத் துய்க்கும் செவ்வி உடையதன்று. தமிழ்ப்பக்குவம் நிரம்பிய கழகப் பாக்கள் வாழ்க்கைப் பக்குவம் நிரம்பும் பட்டமாணவப் பருவத்துக்கே தகும். எனவே பட்டவகுப்பில் பொதுத் தமிழ் இருப்பது இனி இல்லை எனின், தமிழ்க்கடல் தமிழ் வாய்க்காலாகி வற்றிப்போம். இன்று பெருகிவரும் கழக இலக்கியப் பரவலும் தமிழ் நாகரிகமும் தூய தமிழும் தமிழுணர்ச்சியும் தமிழ்க் கொள்கையும் தமிழினமும் அகழ் பொருளாகிப்போம். ஆதலின், முடிந்தால் உள்ள தமிழைக் கூடுதலாக்க வேண்டும். முடியாவிட்டால், உள்ள தமிழை வாழுமாறு காத்துக்கொள்ள வேண்டும். தமிழுக்குச் செய்தக்க அல்ல செயக்கெடும்; தமிழுக்குச் செய்தக்க செய்யாமையானும் கெடும்.

5. கல்லூரிகளில் பட்டவகுப்புவரை இரண்டாம் பகுதி தமிழாக இருத்தலால் முதுகலை (எம். ஏ.), பட்டம் பெற்ற தமிழாசிரியர்கள் தேவை ஏற்படுகின்றது. அதனால் தமிழ் முதுகலை (எம். ஏ.), வகுப்புக்கு ஆண்டுதோறும் மாணவர்கள் கூடுதலாகச் சேருகின்றனர். தனியாகவும் பலர் தமிழ் எழுதுப. இன்று பட்டவகுப்பில் எத்துறை மாணவர்களுக்கும் தமிழ் இருத்தலால், தமிழ் முதுகலை (எம். ஏ.), வகுப்பிற்குப் பலதுறை மாணவர்கள் சேருப. அதனால் தமிழ் பல்துறைவளம் பெறவும் நூல் பெறவும் ஏதுவாகின்றது. பயிற்று மொழிக்கொள்கை ஒருநாள் செயலாகலாம் என்ற நம்பிக்கை பட்டப் பொதுத் தமிழால் ஒட்டிக்கொண்டுள்ளது. பட்டவகுப்பில் வேதியல், விலங்கியல், பயிரியல், பூதவியல், நிலவியல், பொருளியல் கற்கும் மாணவர்கட்குத் தமிழ் இல்லை என்றால், அவர்கள் தமிழ் முதுகலை (எம். ஏ.). வகுப்புக்குச் சேரும் தகுதியில்லாதோர் ஆவர். ஆயின், தமிழ் தமிழிலக்கியத்துக்குப் பயிற்று மொழியாக முடங்கிக் கிடக்குமேயன்றி உலகமாநாடு இருமுறை கொண்டாடிய தமிழ் ஞாலத் துறைகளுக்குப் பயிற்று மொழியாக விரியாது, விளங்காது. பட்டத் தமிழ் ஒழியின், நீரின் நீங்கிய மலர்போல, பயிற்றுமொழிக் கொள்கையே வாடிப்போகும். தமிழுணர்ச்சியும் கலங்கலாகிவிடும்.

6. தமிழகத்து எல்லாத்துறையிலும் ஆட்சிமொழி தமிழே என்பது நம் கொள்கை. அரசு இதனை விரைவாகச் செயற்படுத்துவது அறிந்து மகிழ்கின்றேன். கொண்டுவர முடிவதற்குக் காரணம் இப்போது அலுவலகத்தில் வினையாற்றும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் பட்டவகுப்பில் இரண்டாம் பகுதித் தமிழ் கற்றவர்கள், தமிழுணர்ச்சியைத் தமிழறிவாக்கிக் கொண்ட தகுதியாளர்கள். புகுமுக வகுப்பு கல்லூரியில் இருக்கவேண்டுமா? உயர்நிலைப்பள்ளியோடு சேர்த்துவிடலாமா? என்று ஒரு கல்விப் பூசல் இன்னும் இருக்கின்றது. கல்லூரிப் படிப்பு என்பது பட்டப்படிப்பாயின், அப்படிப்பில் எல்லார்க்கும் பொதுத் தமிழ் இல்லை எனின் கல்லூரியில் தமிழ் இல்லை என்றே பொருளாகும். தமிழ் கல்லாப் பட்டவாணர்கள் வினையாளர்களாக வந்தால், ஆட்சி மொழிக்கொள்கையும் அதிர்ச்சியுறுதோ?

7. இன்று கல்வித்தரம் குறைந்து வருகின்றது என்பது உண்மையே. அத்தரத்தை உயர்த்த முயல்வதும் ஆராய்வதும் கல்வியமைச்சர் அவர்களின் கடனே. தரத்தை எவ்வகையால் உயர்த்தலாம், நடு

வண் பொதுப்பணித்துறைத் தேர்வுகளில் தமிழக மாணவர்கள் பலர் தேர்ச்சியுற வழியாது? என்று காணவேண்டியதும் கல்வியாளர்களை உசாவி வழிவகுக்க வேண்டியதும் அவர்கடனே. ஆனால் இத்தரக் குறைவுக்கு இரண்டாம்பகுதி மொழிச்சுமை காரணம் எனவும் தமிழ்ச் சுமையைத் தள்ளிவிட்டால், விட்ட குதிரை விசைப்புப் போலக் கல் வித்தரம் பன்மடங்கு உயர்ந்து விளங்கும் எனவும் தமிழ்மேல் பழி சுமத்தியவர் எக்கல்வியாளரோ? தமிழக அரசின் எண்ணத்திலும் தமிழ் ஒரு சுமை என்று பட்டது தமிழின் ஊழ்வினைகொல்லோ? "மறம் பயின்றது எங்கோ தமிழ் மாருதம்"? ஊழையும் உப்பக்கம் கண்டு தமிழைக் காத்து வளர்ப்போமாக.

தமிழ் எவ்வகுப்பிலும் மாணவர்க்குச் சுவையே யன்றிச் சுமை யன்று. பட்டவகுப்பு மாணவர்கள் தமிழ்த் தேர்வுக்கென்று நீண்ட நாள் செலவிடுவதில்லை. வகுப்பிற் கேட்பர். தேர்வுக்கு முன் சின்னாள் படிப்பர். தமிழால் துறைப் பாடங்களைப் படிக்கவில்லை என்று சொல்லக் கேட்டிலம். தீந்தமிழ் எத்துறைக்கும் சுமையில்லை; தமி ழொடு படாத துறைகளே சுமையாகி வருகின்றன.

8. (அ) தமிழ் தரத்தைக் குறைக்கவில்லை. ஏனைய பாடங்கள் போல இன்று தமிழின் தரமும் குறைந்து வருகின்றது. தரக்குறைவுக் காரணங்கள் வேறு. உண்மைக் காரணத்தை ஓர்ந்தோ ஓரா மலோ தமிழ்மேல் ஏற்றுவது நம்நாட்டுக் கல்வியாளரின் பொது மரபு. இஃது ஆற்றில் செத்த எருமைக்கு ஊர்க்குடி உன் பொறுப்பு என்பது போலாம். கல்லூரிக் கல்வித்தரம் குறைந்ததற்கு ஒரு முதற்காரணம் ஓராண்டுப் புகுமுகவகுப்பு, மூன்றாண்டுப் பட்டவகுப்பு என்ற காலக் கோளாகும். கல்வியமைச்சர் தமது ஆட்சிக்காலத்து, இரண்டாண்டுப் புகுமுக வகுப்பு, இரண்டாண்டுப் பட்டவகுப்பு, இரண்டாண்டு மேற் பட்டவகுப்பு என்ற காலவரம்பைப் பல்கலைக்கழகங்கள் மேற்கொள் ளும்படி செய்யமுடிந்தால், அது தமிழகக் கல்விக்கு இத் தமிழக அரசு ஆற்றும் பெருந்தொண்டாகும்.

(ஆ) கல்வித்தரக்குறைவுக்கு இன்னொரு பெருங்காரணம் படிப்பு முயற்சிக்கு வழி வகுக்காது அயர்ச்சிக்கு வழி வகுத்தல். கல் லூரியில் படித்துக் கொண்டிருக்கும் கால நடுவில் 'செப்டம்பர்' தேர்வு எழுதவிடுவது. இத் தேர்வு எழுதும் வாய்ப்பு மாணவர்க்கு அளிப் பதை நான் மறுக்கவில்லை. கல்லூரிப் படிப்புக்காலம் முடிந்தபின்

னரே இத்தேர்வு எழுத வாய்ப்பு நல்க வேண்டும். பல ஆண்டுகட்கு முன் இதுதான் முறையாக இருந்தது. இன்னும் சில காரணங்கள் உள. மற்றொன்று விரித்தலாகும் என்று அஞ்சி இரண்டினைமட்டும் சுட்டினேன், தமிழ் காரணம் அல்ல என்பதற்காக.

3. மூன்றும் பகுதித்துறையெல்லாம் ஆங்கில வாயிலாக இருந்தும் முதற்பகுதி ஆங்கிலமும் இருந்து வரக்காண்கின்றோம். ஏன்? பொருட்டுறை அறிவுக்கு ஆங்கில இலக்கிய அறிவும் உடன் வேண்டும் என்பது கருத்து. துறை நூல்கள் ஆங்கில நாட்டவரால் எழுதப் படுகின்றன. அவற்றை நாம் வாங்கிப் பாடநூல்களாகப் பயில்கின்றோம். தமிழ் பயிற்றுமொழி யானால் துறைத்தமிழ் நூல்களை எழுதவும் மொழி பெயர்க்கவும் கடமைப்பட்டுள்ளோம் என்றால், தமிழ் இலக்கிய அறிவு இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளாவது பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் மேற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் கட்டாயம் வேண்டியிருக்கும் என்று தெளிகின்றேன்.

10. கருத்துத் திரட்சி:-

(அ) மூன்றும் பகுதித் துறையெல்லாம் தமிழ் பயிற்று மொழியான பின்னரே இரண்டாம் பகுதிப் பட்டத்தமிழ் வேண்டுமா என்பது சிந்தனைக்குஉரியது.

(ஆ) மூன்றும் பகுதித்துறையெல்லாம் தமிழாக வந்த பின்னருங்கூட பல்துறை நூல்கள் மேன்மேலும் மொழி பெயர்த்தும் எழுதியும் வெளிவரும்வரை பட்டப்படிப்பாளர்க்கு இலக்கியத் தமிழ்த்துணை வேண்டும்.

(இ) பரவிய தமிழுணர்ச்சி வேரூன்ற வேண்டுமானாலும் மேலும் நீடித்துப் பரவவேண்டுமானாலும் பருவம் நிறைந்த பட்டப்படிப்பு மாணவர்கட்குத் தமிழிலக்கியப் பற்றுக்கோடு தளராது வேண்டும்.

(ஈ) மூன்றும் பகுதித் துறைகள் ஆங்கில வாயிலாகக் கற்பிக்கப்படும்வரை முதற்பகுதி ஆங்கில மணிகளைக் குறைத்துக் கொள்ளலாமே. உரைநடைப் பாடங்கள் போதும். செய்யுட் பாடங்களைச் சிறப்பாக ஆங்கிலம் பயில்வார்க்கு வைக்கலாம். இதனால் எஞ்சும் நாலைந்து மணிகளைத் துறைப்பாடத்துக்கு வழங்கலாம்.

(உ) பயிற்றுமொழிக் கொள்கை வெற்றிபெறவும் தமிழுணர்ச்சி நிலைபெறவும் மேற்பட்டப்படிப்பு மாணவர்க்குக்கூட ஓரளவு

தமிழ் இலக்கியம் பாடமாதல் வேண்டும். தமிழ் கலவாத முற்றும் அயல்மொழிப் பட்டம் தமிழகப் பல்கலைக் கழகங்களில் இனி வழங்குதல் ஆகாது.

(ஊ) கல்வித் துறையில் தமிழுக்கு இதுவரை உள்ள இடம் குறையக்கூடாது, குறையவிடக்கூடாது. தமிழ் இருந்த இடம் இல்லாமற் போகக்கூடாது, போகவிடக்கூடாது. தமிழகத்தில் தமிழ் இல்லாத இடத்தைப் பிடிக்கவேண்டும், பிடிக்காமல் விடக்கூடாது.

தமிழை வைப்பதற்கு உள்ள எதிர்ப்பு தமிழை எடுப்பதற்கு இராது. தமிழை எடுப்பதை வரவேற்றுப் பாராட்டும் செய்தித்தாள்களே இருக்கும்; பாராட்டும் கல்வியாளர்களே பலர் இருப்பர். ஏன் எதிர்ப்பு இல்லை என்பதனை எண்ணுதல் வேண்டும். தமிழ் என்பதனால் எதிர்ப்பில்லை என்பதனை உணர்ந்துகொள்ள வேண்டும். உணர்ந்து, "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று வாழ்நாள் முழுதும் மறக்குரல் எழுப்பும் நாம் யார்க்கும் எதிராக ஈடுகொடுத்து நின்று, உள்ள தமிழைக்காக்க வேண்டும். பட்டத்தமிழைப் படாது காக்கவேண்டும்; மேற்பட்ட வகுப்புக்கும் தமிழ் ஆக்கவேண்டும் என்பது நம் வேணவா.

இக் கருத்துகளில் தகும் என்று படுவனவற்றை மேற்கொள்ள வேண்டுகின்றேன். பட்டவகுப்புத் தமிழை அகற்றவோ குறைக்கவோ விடாது பார்த்துக்கொள்ள வேண்டுகின்றேன். இதுவரை அகற்றவும் குறைக்கவும் கல்வித் துறையகத்தாரும் பல்கலைக்கழகத்தாரும் முயற்சி செய்திருந்தால் உடனடியாக நிறுத்தச் செய்யுங்கள் என்று மிக்க பணிவொடு வேண்டுகின்றேன்.

தமிழை இன்றைய கல்விக்கண்ணோடு மாத்திரம் பார்ந்துவிடக்கூடாது. தமிழ் தமிழினத்தின் உயிர்க்கண். வாழ்ந்து வீழ்ந்த மொழி, இனி வீழாது வாழவைக்க வேண்டிய மொழி, பயிற்றுமொழி, ஆட்சிமொழி, உலகமொழி என்ற நெடுங்கோளொடு தமிழ்த் திட்டம் புனைய வேண்டும். தமிழ் கற்ற நாம் சங்கச் சான்றோர் நரி வெரூஉத் தலையார் பாடிய செயல்முறையை நினைவு படுத்திக்கொள்வோமாக:

நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே.

ஓர் அறிவியல் நாடகம்.

தொடரோவியம் தொலைபேசி

"செங்குட்டுவன்"

[எங்கோ யிருக்கும் இருவர் எதிரெதிராக அமர்ந்து உரையாடுவதைப் போல் பேச உதவும் தொலைபேசிக் கருவியைக் கண்டுபிடித்தவர் அலெஃசாண்டர் கிரகாம் பெல் என அறிவோம். உலகோருக்குத் தொலைவினின்றும் பேசவும் கேட்கவும் கருவி யமைத்த இவ்வறிவியலறிஞரின் வாழ்க்கையில்.........வாழ்க்கைச் சுவடியின் ஏடுகள் சிலவற்றைப் புரட்டித்தான் பார்ப்போமே!]

காட்சி- 1

இடம்: அமெரிக்க நாட்டுப் பாசுட்டன் நகரத்தின் சிறந்த மருத்துவர் மில்லரின் மருந்தகம்.

உள்ளோர் பாசுட்டன் நகரவணிகர் அப்பர்டு, அவர் மகள் மேபெல், மருத்துவர் மில்லர்.

காலம்: தி. பி. 1902-இல் ஒருநாள் காலை.

அப்பர்டு: அன்பார்ந்த மருத்துவர் மில்லர் அவர்களே! அருள்கூர்ந்து தங்கள் திறமைகளை யெல்லாம் ஒருங்கிணைத்து என் மகளைப் பேசவும் கேட்கவும் இயலுமாறு செய்யுங்கள். நான் இந்நாள்வரை திரட்டிய சொத்தனைத்தும் செலவாக்கவும் தயங்கவில்லை. என் மேபெல்லைப் பாருங்கள். குமரிப் பருவம் வந்தும்கூட இவளின் மழலை மொழிகளை நான் கேட்க இயலவில்லை யெனின், என் காசு, இருந்தவாறென்னே! குழலினும் யாழினும் மக்கள்தம் மழலைச்சொல் சிறந்ததன்றோ?

மில்லர்: நண்பரே! என்னுடைய திறமை முழுவதையும் தங்களுக்காகச் செலவிடுவதில் நான் பெருமகிழ்ச்சி யடைவேன். ஆனால் உண்மையைத் தாங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா! மேபெல்லின் செவிட்டுத் தன்மையையும் ஊமைத் தன்மையையும் எந்த மருத்துவராலும் போக்கிவிட முடியாது அன்பரே! அவள் அவ்வளவு தம்பட்டச் செவிடு. ஆகையால்

தாங்கள் இருப்பதைக் கொண்டு நிறைவுபெற வேண்டியது தான்.

அப்பர்டு: என்ன? பாசுட்டன் நகரில் உள்ள மருத்துவர் ஒருவர் கூட மேபெல்லைக் குணப்படுத்த முடியுமென்று கூற வில்லை, அமெரிக்காவின் தலைசிறந்த மருத்துவரான மில்லரால்கூடக் குணப்படுத்த இயலாதென்றால் இந்தப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும் மருத்துவத் துறையால் என்ன பயன் நண்பரே!

மில்லர்: அருமை அப்பரே! அவ்வாறு மருத்துவத் துறையை வெறுத்துக் கூறாதீர்கள்- எண்ணிறந்த பிணிகளை நீக்கி மாந்தனை மாந்தனாக நலப்படுத்தும் சீரிய துறை யிஃதே யாம்- எனினும் நம் திறமைக்கு அப்பாற்பட்டதும் உண் டன்றோ?

அப்பர்டு: என் மேபெல்லைப் பாருங்கள்! இவள் இளமையும் அழகும் இந்தக் கேட்கவியலாத் தன்மையால் வீணாகவன்றோ கழிய நேரிடும்!

மில்லர்: இறைவனின் திருவிளையாடல்களில் இஃதும்ஒன்றுபோலும்! மேபெல்லுக்குச் சீரிய அழகைத் தந்து, செவிடியாகப் படைத்துவிட்டான். ஒன்றிற் சிறந்தால் ஒன்றிற் குறை பாடு- இதற்கு நாம் என்ன செய்யமுடியும் அன்பரே!

அப்பர்டு: மேபெல்லின் கேளாத் தன்மையை நீக்கவே யியலாது என்று கூறுகிறீர்களா?

மில்லர்: மறுபடியும் மறுபடியும் கூறித் தங்கள் உள்ளத்தைப் புண் ணாக்க விரும்பவில்லை. இருப்பதைக் கொண்டே மனநிறை வடையுங்கள். எவ்வளவு பணத்தைத் தாங்கள் செலவழித் தாலும் பயன் ஏதும் கிடைக்காது அன்பரே!

அப்பர்டு: அதுசரி. அவள் கேட்க வியலாதவளாகவே யிருந்தாலும் நாம் பேசுவனவற்றை அவள் புரியுமாறு ஏதாவதொரு கருவியாவது செய்யுங்களேன்.

மில்லர்: அருமை அப்பர்டு அவர்களே! தங்கள் மகள்மேல் தாங்கள் கொண்டுள்ள பெரும் அன்பினை நான் நன்கு உணர்கிறேன். 'தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்' என்ற பொன்மொழிக்கு எடுத்துக்காட்டாக விளங் கும் நண்பரே! அத்தகைய கருவியொன்றை எவரும் கண்டு பிடிக்கவில்லை, என்னாலும் செய்ய இயலாது. மருத்துவத்

துறையில்தான் நான் பெரும்புகழ் பெற்றுள்ளேனேயொழிய கருவித்துறையில் நான் ஏதும் அறியாதவனே!

அப்பர்டு: பின் நான் என்னதான் செய்வேன்!

மில்லர்: உங்கள் உள்ளம் வெதும்புவதைக் கண்டு என் மனம் நீரு கிறது. எனினும் தங்கள் மன அமைதிக்காகக் கூறுகிறேன். நமது நகரத்திலேயே, அலெஃசாண்டர் கிரகாம் பெல் என்னும், எடின்பரோ பல்கலைக்கழகத்தில் பயின்ற இளம் பேராசிரியர் ஒருவர் உள்ளார். அவர் செவிடர் பள்ளி ஒன்று நடத்துகிறார். அங்கு அரைகுறைச் செவிடர்களுக்கும் பேச இயலாதவர்களுக்கும் நல்ல பயிற்சி யளிக்கிறார் என்று கேள்வி. பரம்பரையாக அவருக்கு அதே தொழிலாம்! அவர் மிகுந்த மதிநுட்பம் உடையவராகவும் சிறந்த பொறுமை யுடையவராகவும் முதிர்ந்த பட்டறிவு வாய்க்கப் பெற்றவரா கவும் தோற்றுகிறது. எனினும் மருத்துவத் துறையை அவர் அறியார். வேண்டுமென்றால் அவ்விளைஞரை அணு குங்கள். இதோ அவர் முகவரி......

அப்பர்டு: (எழுந்து முகவரிச் சீட்டை வாங்கிக் கொண்டே) மிக்க நன்றி, மில்லர் அவர்களே! மிக்கநன்றி!! இன்றே நான் அப்பேராசிரியரைச் சந்திக்கிறேன். எங்களுக்கு விடை கொடுக்கிறீர்களா?

மில்லர்: சென்று வாருங்கள்.

(மேபெல்லும் அப்பர்டுவும் செல்ல, காட்சி முடிவுறுகிறது)

காட்சி 2

இடம்: அலெஃசாண்டர் கிரகாம் பெல்லின் ஆய்வகத்தில் உள்ள தோர் ஓய்வறை.

உள்ளோர்: பெல்லும் அவரின் துணைவர் வாட்சனும்.

காலம்: காட்சி 1-இல் குறித்த நாளின் மாலை.

பெல்: வாட்சன்! நமது ஆராய்ச்சியை இத்துடன் நிறுத்திவிடலா மென எண்ணுகிறேன். எத்தனை நாட்களுக்குத்தான் மிகுந்த பணமுடையுடன் தொல்லைப்படுவது? பொத்தகங் கள் வாங்கவும் பணமில்லை. கருவிகள் செய்யவும் காசில்லை. என்ன துன்பம் சே......சே!

(டொக்...டொக் எனக் கதவைத் தட்டும் ஒலி கேட்கிறது)

வாட்சன்: (எழுந்து) பார்ப்போம் தலைவரே! யாரோ வந்திருக்கிறார்கள். நான் சென்று உசாவி (விசாரித்து) வருகிறேன். (கதவைத்திறந்து கொண்டு வெளியில் வந்து எதிரே நிற்கும் குமரியையும் முதியவரையும் நோக்கி) தாங்கள் யாரைப்பார்க்க வேண்டும்?

அப்பார்டு: பேராசிரியர் அலெ∴சாண்டர் கிரகாம் பெல் அவர்களைப் பார்க்கவேண்டும்.

வாட்சன்: சிறிதுநேரம் இங்கே அமருங்கள். இதோ வருகிறேன். (வாட்சன் உள்ளே செல்லல்)

பெல்: என்னவாம்?

வாட்சன்: தங்களைக்காண முதியவர் ஒருவரும் இளம்பெண் ஒருத்தியும் காத்திருக்கிறார்கள்,

பெல்: வரச்சொல்லலாமே, வாட்சன்! (வாட்சன் வெளியேவருதல்)

வாட்சன்: (வெளியேவந்து) தாங்களிருவரும் உள்ளே வரலாம்.

(அப்பார்டுவும் மேபெல்லும் உள்ளே நுழைகின்றனர்)

அப்பார்டு: வணக்கம், பேராசிரியர் பெல் அவர்களே!

பெல்: வணக்கம். அமருங்கள். (மேபெல்லின் பக்கம் திரும்பி) பெண்ணே நீயும் அமரலாம்.

அப்பார்டு: என் பெயர் அப்பார்டு. இந்நகரத்தின் பெருவணிகருள்ஒருவன் என அறிந்திருக்கலாம். இவள் என் மகள். மேபெல் என்று பெயர். தங்களுடன் சிறிதுநேரம் தனித்து உரையாட விருப்பம்.

பெல்: இங்கேயே பேசலாம். எனக்குத் தெரிந்ததில் எதுவும் என் துணைவன் வாட்சனுக்குத் தெரியாமல் இருக்காது. (வாட்சன் எழுவதைக்கண்டு) வாட்சன்! நீயும் உடனிருக்கலாம்.

அப்பார்டு: என் மகள் மேபெல்லுக்குக் காது சிறிதும் கேட்காது. நம் நகரத்திலுள்ள மருத்துவர் அனைவரும் மில்லர் முதற்கொண்டு என்ன செய்தாலும் என் மகளுக்குக் காது கேட்காது எனக் கூறிக் கைவிட்டு விட்டனர். மனம் தளர்ந்த நான் இறுதியில் தங்களை மலைபோல நம்பி வந்

துள்ளேன். இவளை-என் மேபெல்லைக் கேட்குமாறும் பேசுமாறும் செய்யத் தங்களால் இயலுமா?

பெல்: முயன்றால் முடியாததொன்றுமில்லை. தங்கள் மகள் கேட்கவும் பேசவும் இயலுமாறு செய்ய முயலுகிறேன்.

அப்பார்டு: (ஆர்வத்துடன்) பேராசிரியரே! தங்களால் முடியுமா? நான் பேசுவதை என் மேபெல் புரிந்து கொள்வாளா? என் மேபெல்லின் மழலைமொழிகளைக் கேட்டு என் செவி குளிருமா? அருள் செய்து உறுதி கூறுங்கள். இந் நகர மருத்துவர்கள் அனைவரும் தோல்வி யடைந்தன ரன்றோ!

பெல்: மருத்துவர்கள் கைவிட்டிருக்கலாம். ஆனால் நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன். என்னுடைய முயற்சி யனைத்தையும் பயன்படுத்தி இவ்விளம் அழகியின் குறைபாட்டை நீக்குவேன். பிறர் பேசுவதை இவள் புரியுமாறும் இவள் பேச எண்ணுவதை நாம் அறியுமாறும் செய்கிறேன். தாங்கள் சிறிதும் மனந்தளரவேண்டா.

அப்பார்டு: மிக்க மகிழ்ச்சி, பேராசிரியரே! தங்களைப்போல் மன ஊக்கம் மிக்கவர் எதையும் செய்யலாம். என் மனத்தில் மேபெல் பேசியதாகவே மதித்தேன். நும் முயற்சிக்கு எவ்வளவு பணம் தேவையோ அவ்வளவையும் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். என் மேபெல் மட்டும் பேசிவிட்டாளாயின் என் சொத்தின் பெரும்பகுதியைத் தங்களுக்கே அளிக்க விரும்புகிறேன்.

பெல்: முயற்சி செய்கிறேன். தங்கள் மகள் தொடர்ந்து என் வகுப்புகளுக்கு வந்து செல்லட்டும், (வாட்சனை நோக்கி) வாட்சன்! இசைக்கவைகளையும் மின் சுற்றுகளையும் சரிப்படுத்தி வை. நாளையிலிருந்து தொடர்ந்த வேலை.

வாட்சன்: ஆகட்டும் தலைவரே!

அப்பார்டு: நும் ஆராய்ச்சிக்குத் தேவையான பணம் அனைத்தையும் தயங்காது பெற்றுக்கொள்ளுங்கள், சரி. நாங்கள் விடை பெற்றுக் கொள்ளட்டுமா?

பெல்: சென்று வாருங்கள்.

(அப்பார்டுவும் மேபெல்லும் செல்கிறார்கள்)



மாணவர் ஆக்கங்கள்!

பெருமதிப்பிற்குரிய ஐயா!

வணக்கம். நிலைமறந்து சமையிழந்து கிடக்கும் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பவந்த அரிமாவாம் தங்கள் மாட்டு, பேரியற்கையின் அருள் பொருந்தப் பெரிதும் இறைஞ்சுகின்றோம்.

ஐயா, தாங்கள் காட்டிய வழியிலே, தனித்தமிழை வளர்க்க எங்களால் முடிந்த சிறு அளவில் செய்ல முனைந்துள்ளோம் இத்துடன் விடுத்துள்ள சொற்களுள்பல எங்களால் ஆக்கப்பெற்றவை. 'தென்மொழி, 'கலைக்கதிர்' போன்ற திங்களிதழ்களில் வெளிவந்த சில சொற்களும் அவற்றுடன் சேர்க்கப்பட்டுள்ளன. எங்

(முன்பக்கத் தொடர்ச்சி)

பெல்: வாட்சன்! அந்தக் கருங்குவளைக் கண்ணி எவ்வளவு அழகாக இருக்கிறாள், எனினும் அவளுடைய குறையைப் பார்த்தாயா! அவளால் கேட்கவும் பேசவும் இயலவில்லை,

வாட்சன்: இயற்கையின் வியப்புக்கூறே அதுதான் தலைவரே!

பெல்: எனினும் அவளது விழியழகும் வனப்பும் அவளது குறைபாட்டை ஈடு செய்கின்றன. அவளால் கேட்கவும் பேசவும் முடிந்தால்...

வாட்சன்: ...சருக்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோல் தான்.

பெல்: நாளையிலிருந்து நமது ஆய்வு தொடரும். மின்சாரத்தைப் பற்றியும் மின்சாரக் கருவிகளைப் பற்றியும் வெளிவந்துள்ள எல்லாப் பொத்தகங்களையும் வாங்கிக்கொண்டு வா. நான் நிறையப் படிக்கவேண்டும். பணத்துக்காகத்தான் நாம் இனிக் கவலைப்பட வேண்டியதில்லையே! எப்படியும் மேபெல்லைப் பேசவைத்துவிட்டால் சரி.

வாட்சன். ஆகட்டும் தலைவரே. அப்பொழுது...நான் சென்று வருகிறேன்.

(வாட்சன் வெளிச் செல்லக் காட்சி முடிவுறுகிறது)

(தொடரும்)

களை யறியாமலும் பல பிழைகள் நேர்ந்திருக்க வாய்ப்புண்டு. அருள்கூர்ந்து பிழைகளைச் சுட்டிக்காட்டி வழிப்படுத்த வேண்டுகின்றேம். ஆக்கப் பெற்றுள்ள கலைச் சொற்கள் தகுதியுடையனவாக இருப்பின் 'தென்மொழி'யில் வெளியிடுவதை வரவேற்கின்றேம். (கலைச்சொற்பட்டி தனியே வேறோர் இடத்தில் வெளியிடப் பெற்றுள்ளது) 'தென்மொழி' வளர்ந்து வரும் நாளிது. சென்ற ஆண்டு எங்களிடம் இரவல் வாங்கிச் சென்று படித்தவர்களின் எண்ணிக்கையைவிட, இந்த ஆண்டு உரிமையுடன் பறித்துச் சென்று படிப்பவர்களின் தொகை மிகுந்திருப்பதைப் பெருமகிழ்வுடன் கூறிக்கொள்ள விழைகின்றேம். இளைஞர்களின் உளத்தைத் 'தென்மொழி' விரைவாகக் கவர்ந்து வருவது கண்டு களிப்படைகிறேம் விடுதலை முழக்கம் வெகு தொலைவில் இல்லை. எனவே முரசமாகிய 'தென்மொழி' இனி வலுவாக-தளர்விலா முறையில் முழக்கப்பெறுதல் வேண்டும். அத்துடன் அறிவியல் துறையில் தமிழை வளர்ப்பதற்கான பணியினையும் விரைந்து செயற்படுத்த வேண்டும்; அறிவியற் கட்டுரைகள் மிகச் சிறப்பாக வெளிவருகின்றன. ஆனால் அவற்றில் வருகின்ற கலைச்சொற்களுள் ஓர் ஒற்றுமை (Uniformity) இல்லை. எனவே அருள் கூர்ந்து தென்மொழியில் ஒருதாளை (இரண்டு பக்கங்கள்) ஒதுக்கி அதில் தனித்தமிழ்க் கலைச்சொற்களை வெளியிட வேண்டுகிறேம். தாங்கள் இசையின் திங்கள்தோறும் அதற்குத் தேவையான சொற்களை மொழியாக்கி விடுக்கக் காத்துக் கிடக்கின்றேம். கட்டுரையாளர்கள் அனைவரும் ஒருவகையான சொற்களையே பயன்படுத்தினுல் தான் கலைச் சொற்கள் மக்கள் உள்ளத்தில் ஆழப்பதிந்து, நம் எண்ணத்தை நிறைவேற்றித் தரும். தங்களுக்கு எடுத்துரைக்கும் அளவிற்குத் தகுதிபடைத்தோம் அல்லம். எனினும் தென்மொழிக்குடும்பத்தினர் என்ற உறவுமுறையில் உரிமையுடன் படைக்கும் வேண்டுகோளே இது.

வெளிவந்துள்ள இதே திரட்டு திங்களொருமுறை மாணுக்கர்களான் எழுதப்பெற்ற அறிவியற் கட்டுரைகளைத் தாங்கி வெளிவர வேண்டும் என்பதற்காக முயன்றேம். பொருட்குறைவாலும், எங்களிடையே போதிய வரவேற்புக் கிடைக்காமையானும் தோல்வியடைந்தது. அம்முயற்சி மாணுக்கர்களுக்குள் ஒற்றுமையை வளர்த்து எல்லாரையும் வழிப்படுத்தி விட்டால் அடிமைத்தளையைத்தூளாக்கிவிடலாம் என்பது எங்கள் அசையாத நம்பிக்கை அடுத்த ஆண்டு இன்னும்

பெரிய அளவில் வெளியிட வேண்டும் என்பது எங்கள் விருப்பம். ஆனால் அரசியலிலும், திரைப்படத்திலும் காட்டும் ஈடுபாடு மொழியில் ஏற்படுவதில்லை என்பதை நோக்குங்கால் வருத்தந்தான் ஏற்படுகிறது. மாணுக்கப் பருவத்தில் எவ்வளவு இயலுமோ அந்த அளவிற்கு முயல உறுதி கூறுகின்றோம்.

வருகின்ற வேனில் விடுமுறையில் மாணுக்கர்கள், இளைஞர்கள் ஆகியோர்களை உள்ளிட்ட ஒரு குழுவை அமைத்து, (மாவட்டந் தோறும்) கிளைக்கழகங்கள் சார்பில் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, நமது கொள்கைகளைப் பரப்ப ஒரு திட்டத்தை வகுத்து நிறைவேற்றுமாறு மிகவும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம். விடுதலை இயக்கம் வெற்றிபெறத் தேவையானவர்கள் இளைஞர்கள்தாம். மடல் நீண்டுவிட்டமைக்குப் பொறுத்தருள்க. தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தி வழிப்படுத்த வேண்டுகிறோம்.

தங்களன்புள்ள,

கோ. திருநாவுக்கரசு,
செயலர், தமிழாக்கக்குழு,
அனைத்துக் கல்லூரிகள் வட்டம்.

கும்பம் கச
தி. பி. உ000
காரைக்குடி-4.

நம்பிக்கை யிழந்த பெருமூச்சு!

கன்னித் தமிழ்க் காவல! எங்கள் தலைதாழ்ந்த வணக்கம்!

வயவ,

5-2-69-ஆம் பக்கல் அன்று நானும் என் நண்பர் ப. துரைசாமியும் தங்களையும் தென்மொழி அச்சகத்தையும் காணவேண்டும் என்ற ஆவலில் கடலூர் வந்தோம். கடலூர் மண்ணில் கால் வைக்குமுன் தென்மொழி அச்சகத்தைப்பற்றி நாங்கள் பெரிதாகக் கற்பனை செய்து கொண்டு வந்தோம். ஆனால் அங்குவந்து அச்சகத்தையும்-அதன் உண்மை நிலையினையும் கண்டபின் எங்களுக்கு உண்மை புலனுயிற்று. எத்துணை இடர்ப்பாட்டில் தாங்கள் தென்மொழியினை அச்சாக்கி வெளியிடுகின்றீர்கள் என்பது எங்களுக்குப் புரிந்தது. எங்கள் உடம்பில் இருக்கும் அரத்தம் எல்லாம் சூடாயிற்று. உண்மைக்காகவும் மொழிக்காகவும் தங்கள் வாழ்க்கையைப் பணயம் வைத்து என்ன கண்டீர்கள்? ஒன்றும் இல்லை! இந்த நன்றிகெட்ட தமிழர்கள் மாறப் போவதில்லை. வெறும் ஆரவாரப் பேச்சுகளுக்கும், அரசியல் கரவாட்டங்களுக்கும் தங்களை அடிமையாக்கிக்கொண்ட தமிழ் மக்கள் தங்கள்

மொழிவழி வரமாட்டார்கள் என்பதற்கு எட்டுணையும் ஐயம் இல்லை. இந்த நிலையில் தாங்கள் தமிழர்பால் கொண்டிருக்கும் மலையத்துணை உறுதியை நினைத்தால் எங்களுக்கு அச்சமாக இருக்கின்றது. உங்களுடைய நம்பிக்கையின் முடிவை, தாங்கிக்கொள்ளும் நெஞ்சுத் துணிவை உங்களுக்குத் தமிழ் அன்னை தரவேண்டும். இந்த நிலையில் என்ன செய்வது? எதைச் செய்வது? எப்படிச் செய்வது என்று குழம்பிய நிலையில் உள்ளோம். அச்சக அமைப்பில் எந்தவகை முன்னேற்றமும் இன்றித் தாங்கள் இடர்ப்படுவதை நாங்கள் நேரில் கண்டோம். எங்கள் உள்ளங்கள் துயரத் தீயில் வெந்து சாம்பலாயின; எங்களுக்கு நம்பிக்கை அற்றுவிட்டது. தமிழன் மாறுவான், மொழி வளரும், தமிழன் தன்னுரிமை அடைவான் என்று கனவுகண்டது எல்லாம் ஊமையன் கனவு போலத்தான். நாங்கள் தளர்ந்துவிட்டோம். காரணம் தாங்கள் தளர்ந்து விட்டீர்கள். உண்மையைக்காட்ட மறைத்தீர்கள். ஆனால் தங்களின் தளர்ச்சியும், தாங்கள் விட்ட பெருமூச்சின் அனல் காற்றும் எங்களுக்கு விளக்கி விட்டன, தாங்கள் சோர்ந்துவிட்டீர்களென்பதை.

ஆம்; தமிழனைப்பற்றியும்-அவன் மொழியைப்பற்றியும் தாங்கள் எண்ணிவந்த எண்ணத்தைச் செயலாக்க முடியவில்லை. தாங்கள் எத்தனைதான் எழுதிக் குவித்தாலும் நாங்கள் மாறப்போவதில்லை என்று மார்தட்டிக் குதிக்கும் தமிழர்களுக்குத் தாங்கள் எத்தனைநாள் வழி காட்டமுடியும்?

தமிழ் நாட்டிற்கும்-கன்னித் தமிழுக்கும்-பாடுபடும் உண்மைத் தானைத் தலைவனுக்கு எத்துணை இடுக்கண்! இத்தனைக்கும் மேல் அவருடன் இருந்து உண்டு, உறங்கிச் சென்றவர்கள், அவர்மேல் சுமத்தும் பழி, பொய்க் கூற்றுகள் ... ! ஏன் இந்த நிலை? "தமிழ்த்தாயே! உன்னைப் போற்றியதற்கும், உன் பெருமையைப் பாடியதற்கும், உன் ஏற்றமிகு நடையை எழுதியதற்கும் அப் பெருமகனுக்கு இது தண்டனையா? வேண்டா தாயே, உன் அருள்பார்வையை இந்த ஒன்றும் தெரியாத தமிழர்பக்கம் நிலைநாட்டு; அவர்களை ஒற்றுமையாக்கித் தென்மொழியின் வழிநடத்து. அப்போதுதான் உன்னைப்பற்றியும், உன் மொழியைப்பற்றியும், உன் அழகு நடையைப்பற்றியும் வருகின்ற தலைமுறை எழுதும்; பேசும்! இல்லாவிட்டால் எப்பொழுது சமையம் வரும் உன்னை மாய்க்க என்று எண்ணிக்கொண்டிருக்கும். வடவரும், பார்ப்பனரும் உண்மையில் 'வெற்றி அடைவர்; இஃது உறுதி. அந்த நிலைக்கு விட்டுவிடாதே!- இந்த ஏதும் தெரியாத உன் மக்களின்மீது அருள்காட்டி, அந்த மூத்த தமிழ்மகனின் மொழி வாழ்வில் நடக்க எங்களுக்கு வழிகாட்டு. வாழ்க உன் தமிழ்ப்புகழ்."

கும்பம் ௧௩	இவண்
தி. பி. ௨000	க. க. ஆறுமுகம், ப. துரைசாமி,
24-2-69 அவிநாசி.	சு. இராமசாமி, சே. கிட்டுசாமி.

என் இயக்கம் பற்றிய சில விளக்கங்கள்!

-3- பெருஞ்சித்திரன்-

ஒரு வேண்டுகோள் மடல்!

(இக்கட்டுரைத் தொடர் நீளமானது. இருபது முப்பது இதழ்களில் தொடரலாம். இதுபலருக்கும் பயன்படும் என்ற நோக்கத்தில் எழுதப்பெறுவது. இதைத் தொடர்ந்து எழுதுவதற்கிடையில் பலராலும் பலகருத்துகள் என்னிடம் சொல்லப்பெற்றன; மடல்வழிஎழுதப் பெற்றன. எல்லாவற்றையும் கருத்தில் கொண்டுள்ளேன். அதற்கு முன் அன்பர்கள் சிலருக்காக இவ்வேண்டுகோள் மடலை விடுக்கின்றேன். இம்மடலுக்குப்பின் மீண்டும் இக்கட்டுரை தொடர்ந்து வெளிவரும். அன்பர்கள் அமைந்து படித்துவர வேண்டிக் கொள்கிறேன். பயனின்றி எந்தஒரு சிறு செயலையும் அறிவு தெளிந்த நாள் முதல் நான் செய்ததில்லை. எனவே பிறர் பயனடையும் பொருட்டாகவே என்னை நடுவாகவைத்து எழுதப்பெறும் இக்கட்டுரையை, என் தற்பெருமைக்காக எழுதப் பெறுவதாக அருள்கூர்ந்து எண்ணிவிட வேண்டா. நான் யாருக்காக இல்லாமற் போயினும் அறிவுத் தெய்வத்திற்குத் தலை வணங்குபவன்.)

என்மேல் மெய்யான அன்பு வைத்திருப்பவர்களுக்கும், என் தூய தமிழ்த்தொண்டிலும் மக்கள் தொண்டிலும் பொதுமை உணர்விலும் நம்பிக்கை கொண்டு என்னை அடிக்கடிவந்து நேரில் கண்டும் அவ்வாறு காணவியலாமல் தொலைவிலிருந்தே என் பணிகளுக்குப் பாராட்டும் ஊக்கமும் உதவியும் அளித்துவருபவர்களுக்கும் நன்றி தெரிவித்து, இவ்வேண்டுகோளை அன்புடன் விடுக்கின்றேன்.

தென்மொழியின் போக்கிற்கு இடையூறாகவும், தடையாகவும் நின்று என்தொண்டுணர்விற்கும் பொதுவாழ்விற்கும் தூய்மையான அன்பிற்கும் மாசுகற்பிக்கும் வகையில் ஆங்காங்கே அன்பர் சிலர் முயன்றுவருவதை நேரிலும் மடல்வழியாகவும் எனக்கு அறிவித்தும் எனக்கு நேரும் இடர்ப்பாடுகளுக்காக வருந்தியும், எச்சரித்தும் வருகின்ற பொதுவுணர்வு சான்ற தூயதமிழன்பர்கள் இனி, அத்தகைய எந்தச் செய்திகளையும் என் செவிகளிற் போட வேண்டாவென்று மன்றடிக் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வுலகம் தோன்றிய நாளிலிருந்து இம்மக்கள் குலத்தை உய்விக்க விரும்பிய நல்லோர்கள் எல்லாருக்குமே இம்மக்களிலேயே

சிலர் மாருகத்தான் நடந்து வந்திருக்கின்றனர். இன்று பேரறிஞன் என்று மக்கள் பாராட்டும் சாக்ரடீசு குற்றஞ்சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டவர். தேவமகன் என்று அன்றும் இன்றும் பாராட்டப் பெறும் ஏசுபிரான் மக்களை ஏமாற்றுபவர், தவருன வழிக்கு இட்டுச் செல்பவர் என்று அன்றைய மக்களால் துன்புறுத்தப்பட்டவர். புத்தர் தீயர் சிலரால் பழித்துரைக்கப் பெற்றவர். நபிகள் மூடமாந்தரால் நாட்டினின்றும் விரட்டியடிக்கப் பெற்றவர். அறிவியல் முனைவர் ஐன்சுடீன் சொத்துகள் பறிக்கப்பட்ட நிலையில் நாடு விட்டு நாடு ஓடியவர். கலிலீயோ கோபுரத்தினின்று தூக்கியெறியப் பெற்றவர். இன்னும் அரசர்களிலும், அறிஞர்களிலும் நூற்றுக்குத் தொண்ணூற்றுவர் அவரவர்காலத்திய மக்களில் ஒருபகுதியினரால்அல்லது பெரும் பகுதியினரால் வெறுக்கப் பெற்றவரே. மக்கள் எல்லாருமே ஒரே படியாகப் போற்றியுரைக்கப் பெறும் தலைவனே, அறிஞனே, அரசனே, வழிகாட்டிகளோ எந்நாட்டு வரலாற்றிலும் இன்றுவரை இருந்ததாக நான் படிக்கவில்லை. படித்தவர்கள் சொன்னலும் கேட்டுக்கொள்ள நான் அணியமாக இருக்கின்றேன். இந்த உண்மைகள் எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாகத் தொகுத்துப் பார்த்தால்தான் நான் கீழே கூறப்போகும் இயற்கையான ஓர் உலக நிலை புலப்படும்.

இவ்வுலகம் வேற்றுமைகளும் ஒற்றுமைகளும், நன்மையும் தீமையும், இன்பமும் துன்பமும், இழிவும் சிறப்பும், அன்பும் வெறுப்பும், அருளும் கொடுமையும், ஒழுக்கமும் ஒழுக்கக்கேடும், ஏற்றமும் இறக்கமும், மயக்கமும் தெளிவும், மெய்யும் பொய்யும், ஒளியும் இருளும், கறுப்பும் வெள்ளையும்—என இன்னும் எழுத்திலடங்கா எண்ணற்ற வேறுபாடுகளைக் கொண்டதாகும். இனி இத் தனித்தனி வேறுபாடுகளும் தத்தம்முள் ஒன்றுடனென்று சிற்றளவிலும் பேரளவிலும் மாறி மாறிக் கலந்த வேறுபாடான தோற்றங்களோ சொல்ல வேண்டுவதில்லை. பொதுவாகச் சொன்னல் எந்த ஓர் இரண்டு அணுவிலும் ஒரேவகையான அகவியக்கமும் புறவியக்கமும் இல்லை. இந்தவுண்மையை அறிவியல் படித்தவர் நன்கு உணர்வர்.

பார்க்கப்படுகின்ற ஒருபொருள் அல்லது ஒரு மாந்தன், பார்க்கின்ற எல்லாக் கண்களுக்கும் ஒரேவகையான உணர்வை ஏற்படுத்துவதில்லை. அதே போல் பார்க்கின்ற ஒரு கண் பார்க்கப் படுகின்ற ஒரு பொருளையோ ஒரு மாந்தனையோ ஒரே உணர்வுடனும் அறிவுடனும் பார்ப்பதில்லை. ஒரே குவளையில் உள்ள நீர் பருகப்படும் ஒரே வாய்க்குப் பல விழுங்குகளிலும் பலசுவைகளை உண்டாக்குகின்றது.

ஒரேவகை மலர் நுகரப்படுகின்ற ஒரே மூக்குக்குக்கூட, பல நேரங்களில் பல வகையான உணர்வுகளை உண்டாக்குகின்றது. ஆனால் இத்தனை வேறுபாடுகளும் பொறிகளை மட்டுமே சார்ந்தன. அறிவுடன் இவை கலக்கும் பொழுதோ இவை அடைகின்ற வேறுபாடுகளுக்கு அளவே இல்லை.

பலருக்குத் தீயவனாக விளங்கும் ஒருவன் சிலருக்கு மிக நல்லவனாக இருக்கலாம். பலருக்கு மிக நல்லவனாகத் தோன்றும் ஒருவன் சிலருக்கு மிகக் கெட்டவனாக இருக்கலாம். பலருக்குத் திருடனாக விளங்குபவன் சிலருக்கு வள்ளலாக இருக்கலாம், பலருக்குக் கொடுமையானவன் சிலருக்கு மிக அன்புள்ளவனாகவிருக்கலாம். பலரைக் கொலை செய்திருப்பவன் சிலர் உயிரைக்காத்தும் இருக்கலாம். ஆனால் இவற்றில்பார்க்க வேண்டிய உண்மை ஒன்று உண்டு. ஒருவன் பலருக்குப் பயனுள்ளவனாக இருக்கின்றானா சிலருக்குப் பயனுள்ளவனாக இருக்கின்றானா என்பதே! சிலர் சிலர்க்குப் பயனுள்ளவர்களாக இருக்கலாம். சிலர் மிகச்சிலர்க்குப் பயன்படலாம். இன்னும் சிலர் ஓரிருவர்க்கே பயனுள்ளவராக வாழலாம். மிகச்சிலரோ தங்களுக்குத் தவிர வேறு எவருக்கும் பயனுள்ளவராக இல்லாமல் இருக்கலாம்.

இங்குக் கூறப்பெற்ற வேறுபாடுகளையும் இன்னும் இவற்றை அடிப்படையாகக் கொண்ட பல்லாயிரக்கணக்கான கூறுபாடுகளையும் அவை அமைந்துள்ள காரண கருமங்களையும் மிகத் துல்லியமாக அறிந்துகொள்ள முயற்சி செய்பவனும், ஓரளவு அறிந்து கொண்டு இருப்பவனும் அதற்குத் தக்கபடி என்னையும் என்னைச் சார்ந்தாரையும் இயக்கிக் கொண்டிருப்பவனும் நான். எனவே எந்தத் தனிஒருவனையும் நான் சிறப்பாகப் பார்க்கமுடியாதவனாக இருக்கின்றேன். இதைச் சிறிது விளங்கும்படி சொன்னால் இவ்வுலகில் உள்ள பூதப் பொருள்களில் எவ்வாறு மூலகங்கள் உள்ளனவோ அப்படியே மன உணர்வுகளுக்கும் மூலமனங்கள் உள்ளன. அவற்றின் கலந்த மயக்கமே ஒவ்வொரு மாந்தனின் உள்ளமும். கலப்பில்லாத ஒரு பொருளையும் நாம் இவ்வுலகில் பார்க்க முடியாதது போல் கலப்பு மனம் வாயாத ஒருவனைக் கூட நாம் பார்க்கமுடியாது. ஒவ்வொருவனுடைய மனத்திலும் எல்லா வேறுபாடுகளும் கலந்து கிடக்கின்றன. கலப்பற்ற எந்தத் தனிமனம் கொண்ட மாந்தனும் இவ்வுலகில் இல்லை. ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் இவ்வேறுபாடுகள் ஒரே அளவுடையவனவாக இல்லாமல் இருப்பது இன்னும் கவனிக்கத் தக்கதாகும்.

ஒரு மாந்த மனத்தில் நூறு அன்பணுக்கள் இருக்கலாம். பத்து வெறுப்பணுக்கள் இருக்கலாம். இருநூறு ஒழுக்க அணுக்கள் இருக்கலாம். இருபத்தைந்து ஒழுக்கக் கேட்டணுக்கள் இருக்கலாம். ஆயிரம் மீமிசை உயிர்க்கூறு அணுக்கள் உறையலாம். முந்நூறு தாழ்ந்த (விலங்கு, பறவைகளுக்கிருப்பன போன்ற) உயிர்க்கூறு அணுக்கள் உலாவலாம். (இங்குக் குறிக்கப்பெற்ற அளவீடுகள் தேற்ற மதிப்பீடுகளே!) இம் மனவணுக்கள் ஒரு மாந்த மனத்தில் ஏற்கனவே இருப்பனவும், இடையில் வந்து சேர்வனவும் அகலுவனவும் ஆகிய பல நிலைப்பாடுகள் கொண்டவை. கேட்கப் பெறும் அல்லது பார்க்கப்பெறும் அல்லது அறியப்பெறும் புற வினைகளுக்கேற்ப மனவணுக்கள் மிகுதல் குறைதல்முதலிய மாறுபாடுகள் எய்துகின்றன. ஒருவன் அன்பணுக்களையே மிகுத்து வெறுப்பணுக்களைத் தகர்த்துக்கொள்ளமுயலலாம். ஒருவன் இன்ப அணுக்களையே மிகுத்துத் துன்ப அணுக்களை விலக்க முயலலாம்; வெற்றியும் பெறலாம்; தோல்வியும்அடையலாம். இவையெல்லாம் தம் தம் அறிவு, முயற்சி, வினை,இலக்கு, சூழல் முதலியனவற்றை அடியொட்டி இயல்வனவும் இயலாதனவுமாகின்றன.

இந்நிலைகள் சூழ்ந்த கூறுபாட்டு, வேறு பாட்டியக்கங்களிலேயே மூழ்கிக் கிடந்து மெய்ம்மை காணத் துடித்துக் கொண்டிருக்கின்ற என் அகவுணர்வையும் புறவுணர்வையும் பிறழவும், மயங்கியும் உள்ளது மறப்பக்கூறியும், இல்லது சிறப்பக் கூறியும் வருகின்ற அன்பர் சிலர்பற்றி நான் என்றும் கவலை கொண்டவனல்லன். அவர்களின் மதிப்பீடுகளுக்கும் கருத்தீடுகளுக்கும் கூட நான் மதிப்பளிப்பவன். அவற்றின் தோற்ற ஏற்றங்களையும் நான் ஆய்பவன். முடிந்த விடத்து அவர்கள்பால் அன்பும் இரக்கமும்கொண்டு அவர்களின் வாழ்வியக்கத்திற்கு உதவியவன்; உதவுபவன். முடியாவிடத்து அவர்களை நெகிழ்ந்த இடத்தேயே விட்டுவிட்டு என் வாழ்வியக்கத்தைப் பற்றி மேலே செல்பவன். மொத்தத்தில் நான் என்றும் மாறுபடாதவன். அவர்களும் மாறுபடவேண்டாதவர்கள். அடிப்படைக் கூறுகள் என்றும் மாறுபாடுற வேண்டுவதில்லை. எனவே அன்றும் இன்றும் என்றுமே நான் நான்தான். என் எண்ணமும் வினையும் ஒன்றுதான் அன்று நான் மீசையும் தாடியுமற்ற உருவினனாக இருந்திருப்பேன். இன்று அவை வளர்ந்தோனாகக் காணப்பட்டிருப்பேன். இனி அவற்றின் இன்றைய கருநிறம் வேறு; நாளைய வெண்ணிறம் வேறு. ஆனாலும் நான் நான் தான். என் கைகள் சிலபொழுது கருமையடையலாம். சில நேரம் கழுவப் பெறலாம். என் மேனி சிலநேரம் வெள்ளுடை பூணப்

பெறலாம். சிலநேரம் அழுக்குடையில் பொதியப் பெறலாம். அன்பர்களே! அப்பொழுதும் நான் நான்தான். அன்றிருந்த நான் வேறு; இன்றிருக்கும் நான் வேறு அல்லன். நான் அவர்கள் முன் உண்கையில் உண்போனாகவும், உடுக்கையில் உடுப்பேனாகவும், திரிகையில் திரிவோனாகவும், புரிகையில் புரிவோனாகவும், ஒளியில் ஒளிர்வோனாகவும். இருளில் கரியோனாகவும் தோற்றமளித்திருக்கலாம். ஆனால் என்னை அவர்கள் முழுமையுமாய்க் காண வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் இல்லை. அவர்களையும் நான் காண வாய்ப்பளிக்கவும் இல்லை. இனி, இரு திறத்தும் வாய்த்தவிடத்து ஒருவரையொருவர் முழுமையும் கண்டு கொள்ளவும் இயலாது. ஐன்சுடீனின் ஒப்புமைக் கொள்கை (Theory of relativity)யை அறிந்தவர்களுக்கு இக்கூற்று ஒருவாறு விளங்கலாம். பொதுவாக என்னைப்பற்றி உரைக்கப்பெறும் உரைகளுக்கு ஒருவாறு தொடர்பும் இருக்கலாம்; தொடர்பு இல்லாமலுமிருக்கலாம் என்னின்றுவெளிப்பட்ட புறத்தோற்றங்களில் அவையும் சிலவாகலாம் ஆனால் அவையே நான்அல்லன். என்னுள் அவை இருக்கலாம். ஆனால் அவற்றுள் நான் இல்லை. சொற்கள் மனநிலத்தின் பயிர்களாகலாம். ஆனால் பயிர்களே நிலமன்று. நெற்பயிரை மட்டும், அல்லது புல்லை மட்டும் விளைவிக்கும் நிலத்தை எங்கேனும் நீங்கள் கண்டதுண்டா? எல்லார்க்கும் பொதுவாகிய நிலம்போல் உள்ள என்பால் நெல்லை விதைத்தவர்கள் நெல்லை அறுத்துக் கொண்டு போனார்கள்; கம்பை விதைத்தவர்கள் கம்பை அறுத்துக்கொண்டு போனார்கள். புல்லை மட்டும் பார்த்தவர்கள் புல்லைக் கட்டிக்கொண்டு வந்திருப்பார்கள். நான் அவர்களுக்கு முன்பே சொல்லியிருக்கின்றேன். ஆவினிடம் பால் தேடிவந்தவர்கள் பாலைக்கறந்து போவார்கள்; சாணியைத் தேடி வந்தவர்கள் சாணியை வாரிப் போவார்கள் என்று. என்ன விதையுடன்வந்தார்களோ அதை விதைத்து அறுவடை செய்துகொண்டு போனார்கள் விதை அவர்களுடையது; விளைவும் அவர்களுடையதுதான். அவர்களுக்கு நான் நிலமாக இருந்தேன். அவர்களின் விதையை இங்கு விதைத்து அறுவடை செய்துகொள்ள நான் உதவினேன். ஒன்றை விதைத்துவிட்டு ஒன்றுக்குக் காத்திருந்தார்கள். வேளாண்மையைப் பற்றிக் கவலைப்படாதவர்கள் சிலர். விதைத்ததற்கு மேல் அறுக்கப் பார்த்தவர்கள் சிலர். சிலர் பதரைக் கொண்டுவந்தனர். ஓரிருவர்

உமி நீங்கிய அரிசியை விதைக்கக் கொண்டுவந்தனர். இவர்கள் பிஞ்சில் பழுத்தவர்கள் அல்லது வெம்பியவர்கள். இத்தகையோரின் விளைவு சாவியாகப் போனதும் நிலத்தைக் களர் என்றும் கற்பாறை என்றும் கரிசல் என்றும் களிமண் என்றும் பழித்து விட்டுப்போனார்கள். அவர்கள் கொண்டுவந்த விதைகளைப் பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஒருவாறு அறிந்தவர் பெருமளவில் அவற்றை மதிப்பிட்டனர்: சிலர் அளவை மிகுத்துக் கூறினர். ஆனாலும் அவற்றின் உண்மையான தரத்தை அவர்களால் வேறு பிரிக்கக்கூடவில்லை எனவே அவர்கள் நிலத்தைப் பழிப்பதைப் பற்றி நான்கவலைப்படப் போவதில்லை. அவர்கள் தங்கள் கைகளில் உள்ள விதைகளை எங்கு வேண்டுமானாலும் விளைவித்துக் கொள்ளலாம். அறுவடை செய்யலாம். விருந்திட்டுக் கொள்ளலாம். அதைப்பற்றி நான் கவலைப்படுபவன் அல்லன். என்னுடைய கவலையெல்லாம் எல்லாரும் தங்கள் தங்களுடைய கைகளில் உள்ள விதைகளை எல்லாரின் பொருட்டும் விதைத்து வேளாண்மை செய்ய வேண்டும் என்பதுதான்.

எனவே என்மேல் நம்பிக்கைவைத்த உள்ளங்களே! என்மேல் நம்பிக்கை யிழந்தவர்களின் சொற்களைக் கட்டிவந்து என் செவிகளிற் போட்டு நிரப்பாதீர்கள் என்மேல் அன்பு வைத்தவர்களே என்மேல் அன்பில்லாதவர்கள் கூறுவனவற்றை என்பால் வாரிக் கொண்டு வராதீர்கள். நான் அவற்றைக் கேட்க விரும்பவில்லை. ஊற்றுக்கண் ஆற்றுநீரை உள்வாங்கிக் கொள்ள விரும்புவதில்லை. நீருக்கு நீர்பாய்ச்ச வேண்டா. நிலத்துக்குப் பாய்ச்சுங்கள் நான் இறைக்கின்றவன். மேலும் அவர்களும் ஒருகால் உங்களைப் போல் என்னிடம் அன்பு காட்டியவர்களே! என்னிடம் நம்பிக்கை வைத்தவர்களே! எனவே அவர்கள் வாரிக்கொண்டு போனவற்றை நீங்கள் மீட்டுக்கொண்டு வர வேண்டா.

என்னை உங்களுக்குக் காவற்காரனாக வைத்துக் கொள்ளுங்கள் எனக்கு நீங்கள் காவலாக அமையவேண்டா. நான் உங்களுக்காக உழைக்க விரும்புபவன் என்னை உழைக்க விடுங்கள்! என்னைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நான் உங்களில் பெரும்பாலோர்க்குப் பயன்பட மாட்டேன் என்று நீங்கள் கருதினால் என்னை அழித்து விடுங்கள்.

இங்ஙனம்

என்றும் உங்கள் அன்பன்,

தொடர்-3.

கண்ணுக்குப் புலனாகாத ஒளி.

த. சலாவுத்தீன். அறி- இ-, ஆ- ப.

6. புதிர்க்கதிர்கள் (X-RAYS)

1895-இல் செர்மனியைச் சேர்ந்த வில் எல்ம் இராண்சென் (Willilm Roentgen) என்பவர் 'குருக்சின் குழாயைக்' கொண்டு ஆய்வுகள் பல செய்தார். குழாய்க்குள் உள்ள இரண்டு மாழைத் துண்டுகளுக்கிடையே மின்சாரம் செலுத்தியதனால், குழாய் நீலம் அல்லது இளஞ்சிவப்பு வண்ணத்துடன் ஒளிர்ந்தது.

இவ்வாய்வுச் சாலையில், ஆய்வு செய்யும் இடத்திற்கு அருகே, ஒளிவிழும்பொழுது, ஒளிரும் பண்பையுடைய வேதியல் பொருள் தடவப்பட்ட திரை யொன்று வைக்கப்பட்டிருந்தது. இராண்சென் குருக்சின் குழாயைத் தடிப்பான கறுப்புத் தாளினால், ஒளி சிறிதும் வெளிச் செல்லாதவாறு மூடிவிட்டார். இப்போது மின்சாரத்தைப் பாய்ச்சினார். அந்தத் திரையைப் பார்த்ததில் திரை ஒளிர்ந்துகொண்டிருந்தது. ஆனால் அங்கிருந்து ஒளி வரவில்லை. இராண்சன் மின்சாரம் செல்வதை நிறுத்தினார். திரையில் இருள் படர்ந்தது. மீண்டும் மின்சாரத்தைப் பாய்ச்சினார்.

மீண்டும், மீண்டும் பல ஆராய்ச்சிகளைச் செய்தார், இராண்சன். குருக்சின் குழாய் முழுவதும் கறுப்புத் தாளினால் மூடப்பட்டிருந்ததால், கண்ணுக்குப் புலனாகும் ஒளி ஒன்றும் வெளிச் செல்லவில்லை. ஏதோ ஒருவகையான கதிர்கள் வெளியேறுகின்றன என்று நினைத்தார். அவற்றைப் பற்றிச் சரியாகத் தெரியாததால் அவற்றிற்குப் புதிர்க் கதிர்கள் (X-rays) எனப் பெயரிட்டார். இக் கதிர்கள் கறுப்புத்தாளின் வழியே செல்லும் திறன் படைத்தவை என்றால், அவை எதன்ஊடேயும் செல்லும். இராண்சென் குழாய்க்கும் திரைக்கும் இடையே ஒரு புத்தகத்தை நீட்டினார். அப்பொழுதும் திரைஒளிர்ந்தது பிறகு தன் கையை நீட்டினார். அவரே வியக்கும் வகையில் அவருடைய கை எலும்புகளின் அமைப்புத் திரையில் விழுந்தது. இக் கதிர்கள் கையின் மென்மையான பகுதியின் ஊடே சென்று இருக்கின்றன. ஆனால் அவற்றை எலும்புகள் தடுத்து நிறுத்திவிட்டன. ஆகையால், எலும்புகளின் அமைப்பு திரையில் விழுந்தது.

தம் கண்டுப்பிடிப்பு மருத்துவர்க்கு மிகவும் பயன்படும் என் பதை அவர் உணர்ந்து மருத்துவக் குழுவினருக்கு இதைப் பற்றித் தெரிவித்தார். சில நாட்களுக்குள் மருத்துவர்கள், உடைந்த எலும்பு கள், பற்கள், உடலின் உட்பகுதிகள் ஆகியவற்றை ஆராய இக்கதிர் களைப் பயன்படுத்தினர். தொழுநோய், எலும்புருக்கி நோய், முட்ட ழற்சி, கீல்வாதம், நெஞ்சாங்குலை நோய், தைராய்ட் நோய், இவை போன்ற ஏறத்தாழ 12 நோய்களினால் உடலிலுள்ள எலும்புகளில் சிற்சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு நோயினாலும் உண் டாகும் மாற்றம் வேறுபட்டு இருக்கும். நம் கையின் புதிர்க்கதிர் படம் எடுத்து அதைத் தகுந்த மருத்துவர் நுணுகிப் பார்த்து எந்த நோய் நமக்கு இருக்கின்றது என்பதைச் சொல்ல இயலும்.

புதிர்க் கதிர்க் கருவிகள் குரூக்சின் குழாய் வேலை செய்வது போலவே வேலை செய்கின்றன. இக் கருவிகள் இரண்டு வகைப்படும். ஒன்றின் மூலம் பழுதடைந்த பாகத்தின் புகைப்படம் எடுத்து ஆரா யப்படுகின்றது. மற்றதில் நோயாளி நிறுத்தப்பட்டு புதிர்க்கதிர்கள் செலுத்தத் திரையில் அவனின் உள்ளமைப்புத் தெரியும். புதிர்க்கதிர் கள் கண்டுபிடித்தமைக்கு 1901-இல் இராண்சனுக்கு இயைபியலுக் கான (Physics) முதல் நோபல் பரிசு அளிக்கப்பட்டது.

இதன் பிறகு 10 ஆண்டுகளுக்குப் பின் புதிர்க் கதிர்கள் மின் காந்த வண்ண நிரலின் ஒருபகுதி என்பது கண்டு பிடிக்கப்பட்டது. இவை குறைந்த அலை நீளத்தைக் கொண்டவை. செந்நீல மேற் கதிர் களைவிடக் குறைவான நீளம் உடையவை. 250 நூறாயிரம் புதிர்க் கதிர்களை ஒன்று சேர்த்தால், ஒரு விரற்கடை நீளம் வரும். புதிர்க் கதிர்கள் நன்மைகள் பல செய்தாலும், தீமைகளையும் விளைவிக்கின் றன. இக்கதிர்கள் மிகுந்தநேரம் உடலிற்பட்டால் நல்ல உயிர்மங்களை யும் கொன்றுவிடுகின்றன. சில நேரங்களில் இறப்பும் உண்டாகும். இதன் கொல்லுந் திறன் புற்றுநோய், உயிர்மங்களைக் கொல்லப்பயன் படுகிறது.

மருத்துவப் பள்ளிகளில் இப்பொழுது இருந்துவரும் முறை மாணவர்கள் ஒருவரையொருவர் புதிர்க் கதிர்ப்படம் எடுத்துக் கொள் வதாகும். அளவுக்கு மிகுதியான புதிர்க்கதிர் வீச்சிற்கு உட்பட்டால், கெடுதல் மிகுதியு முண்டாகும். இதைத் தவிர்க்க அமெரிக்க மருத்து வப்பள்ளிகளில் செயற்கைமாணவன் ஒருவனைப்பயன்படுத்துகிறார்கள்.

இந்தச் செயற்கை மாணவனுக்கு எந்தக் கெடுதியுமிருக்காது. மாந்தனின் எலும்புக்கூட்டை வைத்துச் சிறப்பாக அமைத்திருக்கிறார்கள், இந்தச் செயற்கை மாணவனை. இழுவை (இரப்பர்) நெகிழி (பிளாசுடிக்) போன்ற பொருள்களைப் பயன்படுத்தி எல்லா உறுப்புகளும் மிகத் துல்லியமாகச் செய்யப்பட்டுள்ளன. உடலின் அசைய்க்கூடிய முக்கிய மூட்டுகளின் கீல்கள் பொருத்தப் பட்டுள்ளன. பல நிலைகளில் இச் செயற்கை மாணவனை வைத்துப் படம் பிடிக்கலாம். மாந்தனின் உடலில் இருப்பதுபோலவே, குருதிக்குழல்களனைத்தும் இருக்கின்றன. ஒரு பீச்சாங்குழல் மணித்துளிக்கு 72 முறை குருதியைப் பாய்ச்சும். இக் கதிர்களின் தீய குணத்தால் நோய்ப்பட்ட இடத்தைவிட்டு மற்றப் பாகங்கள் பாதுகாக்கப்பட வேண்டி கரிய ஆடை போர்த்தப் படுகின்றது. காரீயம் (Lead) புதிர்க் கதிர்களைத் தடுக்கும் தன்மை பெற்றுள்ளது.

புதிர்க் கதிர்கள், மருத்துவ மனைகளில் மட்டுமல்லாமல், தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப் படுகின்றன. மாழைகளின் உள்ளுள்ள விரிசல்களைக் காணவும், வானூர்திகளின் உள் பாகங்களைச் சரி பார்க்கவும், மூடப்பட்ட வெண்சுருட்டுப் பெட்டியில் சரியான எண்ணிக்கையுள்ள வெண்சுருட்டுக்களிருக்கின்றனவா என்பதைத் தெரிந்து கொள்ளவும் இக் கதிர்கள் பயன்படுகின்றன. புதிர்க் கதிர்களால் உணவுப் பொட்டலங்களினுள் வேண்டாப் பொருள்கள் சேர்ந்திருந்தால் அவற்றையும் கண்டுபிடித்துவிடலாம். முட்டைகளில் நல்லனவற்றையும், கெட்டவற்றையும் கண்டுபிடித்துப் பிரித்து விடலாம். அஞ்சல் துறையிலும் இதுமிகுதியும் பயன்படுகிறது.

புதிர்க்கதிர் நுண் பெருக்காடி மூலம் (X-ray microscope) பொதுவான நுண் பெருக்காடி மூலம் பார்க்க முடியாத பொருள்களையும் காணமுடிகின்றது. இதனால் அறிஞர்கள் புதுப்புதுப் பொருள்களைக் காண முடிகின்றது. இராண்சனால் கண்டுபிடிக்கப்பட்ட புதிர்க் கதிர்கள் பல புதிய கண்டுபிடிப்புகளுக்குத் தூண்டுகோலாய் மாறின.

7. காமாக் கதிர்கள் (GAMMA RAYS)

இராண்சன் புதிர்க் கதிர்கள் கண்டுபிடித்த பிறகு, இக் கதிர்களைப்பற்றி அன்டொனி என்றி பேக்குரல் (Antoine Henri Becquerel) என்பவர் இன்னும் பல ஆராய்ச்சிகள் செய்தார். ஒரு நாள் 'யுரேனியம்' உள்ள ஒருகூட்டுப் பொருளைப் புகைப்படத் தட்டுகளுள்ள

பெட்டியின்மீது வைத்து விட்டார். பிறகு புகைப்படத் தட்டை எடுத்துக் கழுவிப் பார்த்ததில் தட்டில் உரேனியம் வைத்த இடத்தில் ஒரு கருப்புப்புள்ளி காணப்பட்டது. உரேனியம் கண்ணுக்குப் புலனாகாத கதிர்களை அனுப்புகிறது என்று பல ஆராய்ச்சிகளின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டது.

பேக்குரலின் இவ்வாய்வுகளை போலந்தைச் சேர்ந்த 'மேரிகியூரி' செய்தார். உரேனியத்தைப் போலவே மற்ற ஏதாவது ஒரு மூலகம் கதிர்களைக் கொடுக்கின்றதா என்று தெரிந்துகொள்ள முற்பட்டார். அவரும் அவருடைய கணவரும் சேர்ந்து "இரேடியம்" என்ற மிகக் கதிர்வீச்சல் திறன் (Radioactive) படைத்த மூலகத்தைக் கண்டு பிடித்தனர். கதிர் வீச்சுக் கிளர்ச்சியுள்ள எல்லா மூலகங்களும் தொடர்ச்சியான அணுக்கள் போன்ற "ஆல்பா" துகள்களையும் (**Alpha particles**)பீட்டா துகள்களையும் (**Beta particles**) வெளியே அனுப்புகின்றன. இதுமட்டுமல்லாது ஒரு வகையான மின் காந்த அலைகளையும் அனுப்புகின்றன. இவற்றிற்கு "காமா கதிர்கள்" (**GAMMA RAYS**) என்று பெயர்.

காமா கதிர்கள் குறைந்த அலைநீளத்தைக் கொண்டமையால் மிகுந்த அதிர்வு எண்ணையும், ஆற்றலையும் பெற்றவை. புதிர்க் கதிர்கள் செல்லாத பொருள்களின் ஊடேயும் காமா கதிர்கள் சென்று உள்ளேயுள்ள அமைப்பைப் புகைப்படம் எடுக்கும் தன்மையுடையவை. மருத்துவத்திலும் இது மிகுதியும் பயன்படுகிறது. புற்றுநோய் நுண்ணுயிரிகளைக் கொல்லும் திறன் காமா கதிர்களுக்கு, புதிர்க்கதிர்களை விட மிகுதி. மருத்துவத்தில் காமா கதிர்கள் உண்டுபண்ண இரேடியம் மட்டும் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இப்போது இயற்கையில் கதிர்வீச்சுக் கிளர்ச்சி யில்லாத பொருளைச் செயற்கையாகக் கதிர் வீச்சுக் கிளர்ச்சியுடைய பொருளாக மாற்றி விடுகின்றார்கள். இது போன்ற ஒரு பொருள் (கதிர் வீச்சுக் கிளர்ச்சியுள்ள கோபலம்) (**Radioactive cobalt**) ஆகும். இது கோபலக் குண்டு (**Cobalt bomb**) என்ற கருவியில் பயன்படுத்தப்படுகின்றது. இது காண்பதற்குப் புதிர்க்கதிர் கருவியைப் போலவே இருக்கும்.

காமா கதிர்கள் எதன் ஊடேயும் செல்லும். ஆகையால் மேற்சொன்ன கருவி வைக்கப்பட்ட அறை பல அடிகள் தடிப்பாக இருக்கும். காமா கதிர்கள் மிகுந்த தீங்கு விளைவிக்கும் தன்மையுடையவை.

ஆகையால் இதைப் பயன்படுத்திக் கருவிகள் தயாரிப்பது மிகக்கடின மாக இருக்கிறது. இக்கதிர்களைப் பயன்படக்கூடிய வகையில் (அறிவியல், மருத்துவஇயல், தாவரவியல்) செய்ய இன்னும் பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

8. 'காசுமிக்' கதிர்கள் (COSMIC RAYS)

கண்ணுக்குப் புலனாகாத கதிர்களிலேயே மிகுந்த ஆற்றலும் மிகுந்த புதிரும் கொண்ட கதிர்கள் காசுமிக் கதிர்கள். இக் காசுமிக் கதிர்கள் எங்கிருந்து வருகின்றன, எங்கு உண்டாகின்றன என்பவை இன்னும் புதிராகவே இருக்கின்றன. இக் கதிர்கள் விண்வெளியிலிருந்து வருவதாகக் கூறப்படுகின்றன. கண்ணுக்குப் புலனாகும் கதிர்கள் பல வழிகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் காசுமிக் கதிர்கள் அவ்வாறு பயன்படுத்தப் படுவதில்லை. உலகெங்கிலுமுள்ள அறிவியல் அறிஞர்கள் இக் கதிர்களைப் பற்றிப் பல ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றனர்.

காசுமிக்கதிர்கள் மிகக்குறைந்த அலை நீளத்தையுடையவை. பல நூறாயிரம் கதிர்களை ஒன்று சேர்த்தால் ஒரு விரற்கடை நீளம் வருமாம்! இக் கதிர்களின் ஆற்றல் மிகக் கூடுதலானது! அளவிட முடியாது!! இக்கதிர்களின் ஆற்றலையும் அணுக்குண்டின் ஆற்றலையும் ஒத்துப் பார்த்தால், இக் கதிர்களின் முன் அணுக்குண்டு ஒரு விளையாட்டுப் பொருளே!!! காசுமிக் கதிர்கள் விண்ணிலிருந்து அப்படியே நிலத்திற்கு வந்தால் நாமெல்லாம் சாம்பலாகிவிடுவோம். ஆனால் அவ்வாறு அவை வருவதில்லை. இக் கதிர்களின் பண்பை அறியப் பல காற்றுப் பூதிகள்(பலூன்)கள் விடப்பட்டன. இதன்காரணமாக இரண்டு கோட்பாடுகள்காசுமிக் கதிர்கள் தோன்றுதலைப் பற்றி வெளியிடப்பட்டன.

முதற் கோட்பாடு:-

பெரிய விண்மீன்களில் உண்டான வெடிப்பினால் மிகுந்த அளவு ஒளி உண்டாயிற்று. இதன் பயனாகக் காசுமிக் கதிர்கள் வந்தன என்பதாகும்.

இரண்டாவது கோட்பாடு:-

காசுமிக் கதிர்கள் என்பவை (கதிரவன்உட்பட)விண்மீன்களால் வெளித்தள்ளப்படும் துகள்களே என்பதாகும்.

இக் கதிர்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியவை பல உள்ளன. காலவட்டத்தில் அறிவியல் அறிஞர்கள் அவற்றைக் காணுவர்.

9. "இலாசர்" கதிர்கள்

1960-இல் புதுவகையான கதிர்கள் உண்டாக்கப்பட்டன. இவற்றிற்கு "இலாசர்" கதிர்கள் எனப் பெயர். ஒரு பொதுவான மின் விளக்கை எரித்தோமானால், விளக்கிலிருந்து ஒளிக்கதிர்கள் எல்லாத் திசைகளிலும் பாய்கின்றன. இவ்வாறுகப் பாயும் ஒளிக்கதிர்களின் அலைநீளம் மாறுபட்டும் இருக்கும்.

இலாசர் விளக்கிலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் ஒரே திசையில் செல்லும். அவற்றின் அலைநீளம் ஒன்றாகவே இருக்கும். இக்கதிர்களை ஒரு சிறு புள்ளியில்கூடக் குவிய வைக்கலாம்.

முதல் "இலாசர்" விளக்கை தியோடர். எச். மேயிமேன் (Theodore. H Maiman) என்ற அமெரிக்கர் செய்தார். கரிக்கோல் (Pencil) அளவுள்ள "சிவப்புக்கோல்" (Ruby Rod) ஒன்று புகைப்பட மின் விளக்குடன் இணைக்கப்பட்டிருக்கும். புகைப்பட விளக்கு எரியும்போது, அவ்வொளி சிவப்புக் கற் கோலிலுள்ள மின்னணுக்களை (Electrons) தூண்டுவதால் ஒரு போகான ஒளிக்கதிர்கள் வெளிவருகின்றன. இதற்கு இலாசர்க் கதிர்கள் என்கிறோம்.

இலாசர்க் கதிர்களை உண்டாக்கப் பலபொருள்கள் பயன்படுத்தப் படுகின்றன. அவை:-

1. திடப் பொருள்கள்-சிவப்புக்கல், கண்ணாடி, "கேல்சியம் டங்சேட்"
2. பாய்மங்கள் (Liquids) "நைட்ரோ பென்சீன்" (Nitro benzene)
3. வளிகள்:- ஈலியம் (Helium) நியான், தீயகம், ஆர்கன், கிரெப்டன் ஆகியவை.

இலாசரின் பயன்கள்:-

குறுகிய இலாசர்க்கதிர் ஒருவினாடிக்குக் குறைந்த நேரத்தில் ஒரு திடப் பொருளில் துளைசெய்து விடும். வைரத்தையும், துளைசெய்து விடும். மாழைகளை வெட்டவும் ஒட்டவும் இது பயன் படுகிறது. விண்

ணில் செயற்கைக் கோள்கள் செல்லும் பாதை இதனால் அறியலாம். கண் அறுவைப் பண்டுவத்தில் பயன்படுகின்றது. இதன் மூலம் சில வேதியல் மாற்றங்களைக் கட்டுப் படுத்தலாம்.

இலாசர் மிகுந்த வெப்பத்தை உடையதாகையால் அதன் பக்கம் எது சென்றாலும் அது சாம்பலாகிவிடும். எதிரிகளின் விண்வெளிக் கணைகள் நம்மை நோக்கி வரும்போது, அவற்றின்மீது இலாசர் ஒளிக் கதிரைச் செலுத்தினால் அவை நொடியில் ஆவி நிலைக்குப் பாய்விடும் என்று சொல்லப் படுகின்றது.

இதுகாறும், புலனாகாத ஒளியினைப் பற்றியும், அவற்றின் வகைகளைப் பற்றியும் அவற்றின் பயன்பற்றியும் அறிந்து கொண்டோம். இவற்றைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து கொண்டே வருகின்றன. அவற்றையும் அறிந்து கொள்ள நாம் ஆவலுடன் இருப்போமாக! O

'தென்மொழி' தாளிகையின் வெளியீட்டு அறிக்கை.

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956,
4-ஆம் வகுப்பு—8-ஆம் கட்டளைப்படி)

1.	வெளியிடும் இடம்:	கடலூர்-1.
2.	காலமுறை:	திங்கள் ஒரு முறை.
3.	அச்சகத்தார்:	மா. தாமரை. தென்மொழி அச்சகம், கடலூர்-1.
	இனம், முகவரி:	தமிழர், கடலூர்-1.
4.	வெளியிடுவோர்:	பெருஞ்சித்திரன்.
	இனம்:	தமிழர்.
	முகவரி:	தென்மொழி அச்சகம், கடலூர்-1.
5.	ஆசிரியர் பெயர், முகவரி:	பெருஞ்சித்திரன், கடலூர்-1.
6.	ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர்தம் பெயர்களும், முகவரிகளும்	பெருஞ்சித்திரன். கடலூர்-1

பெருஞ்சித்திரனாகிய நான் இவ்வுறுதிவழி மேலே காணப் பெறும் விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை முற்றிலும் உண்மையென முடிவாக அறிகின்றேன்.

1—3—69
கடலூர்-1.

—பெருஞ்சித்திரன்,
ஒப்பம்.

திருவள்ளுவர் விழாவா? பயனென்ன ?

பெருஞ்சித்திரன்-

திருவாரூரில் (2-3-69) கும்பம் ௧௯ அன்று தொடங்கி நடந்த திருவள்ளுவர் ஈராயிரமாண்டுக் கிழமை விழாவில் முதல் நாள் நடந்த பாட்டரங்கத்தின் தலைமையுரை இது. பிறரும் பயனடையும் பொருட்டு இங்கு வெளியிடப்பெறுகின்றது.

முன்னுரை

பேரன் புடைய பெரியோரே! தாய்மாரே!
சீரன்பு கொண்டிருக்கும் மாணவச் செல்வங்காள்!
பாட்டரங்கம் ஏறவந்த பாவலர்காள்! அன்பர்காள்!
கூட்டிருக்கும் ஆவி குழைய வணங்குகிறேன்.

இங்கு, திரு வள்ளுவரின் ஈரா யிரமாண்டு
பொங்கி நிறைந்தவொரு பூரிப்பால் நம்முள்ளம்
விம்மும்; புளமுகறும்; வெற்றி விழாவெடுக்கும்!
எம்மூரும் எந்நாடும் எவ்வினமும் வள்ளுவரைத்
தம்மூரான் தம்நாட்டான் தம்மினத்தான் என்றுகொள்ளும்
பெற்றித் திருமான், பெறலரிய மெய்ப்புகழோன்,
வற்றியநம் வாழ்க்கை வளம்பெருக்கும் நல்லாசான்.
நல்லறத்தின் வித்து; நடுவூர்ப் பழுத்தமரம்!
இல்லறத்தைக் காத்த எழில்தந்தை, நற்செவிலி,
ஆட்சி வகுத்த அறவாணன்; செந்தமிழ்க்கு
மாட்சி கொடுத்துயர்ந்த மாப்புலவன்; பாட்டிறைவன்,
கல்விக் கதிரோன்; கருத்துக்குச் சொல்லுழவன்,
பல்துறைக்கும் உள்ளொளியால் பாட்டுரைத்த செம்புலவன்,

தன்பெயரைக் கூறுத் தனித்தகையோன்; கல்விவள்ளல்,
அன்புரையால் தீமை அறக்கடியும் நன்னெஞ்சன்,
ஆழ்ந்தகன்ற பேரறிவால் ஆன்ற முதல்நூலான்!
காழ்த்த அறிவுமணி! கங்குகரை யற்றகடல்!

--அன்ன பெரும்புலவர்க் கான்ற திருவிழவில்
என்னை, சிறியேனை, எற்றுக்கும் பற்றாத
துன்னுஞ் சிறுதுரும்பைத் தூணென்று கொண்டதுபோல்
மன்னும் பெருவிழவின் மன்றத் தலைவனெனக்

கொண்டு புகழ்கொண்டீர் கூற்றிற் குறைபொறுப்பீர்!
தொண்டேஎம் வாழ்வெனலால் தோல்வியும்எம் வெற்றியன்றோ?

வாழுந் தமிழ்க்குலத்தீர்! வாழ்க்கை பலகோடி!
சூழுகின்ற வாழ்க்கையெலாம் சோற்றுக்கே என்போம்நாம்!
நல்லறங்கள் செய்யோம்; நலந்தேடி நாம்போகோம்,
வல்லமற நெஞ்சால் வருந்துயருக் காட்பட்டோம்!
ஈட்டலெல்லாம் தீநெறியே! ஈவதெல்லாம் தீநெறிக்கே!
நாட்டலெல்லாம் பொய்யுரையே! நாடலெல்லாம் போலிகளே!

மெய்யுரைக்கச் சொல்லிடுவோம்; மெய்பேச நாம்விரும்போம்!
பையுறைக்குள் பைவைத்துக் காசைப் பதுக்கிடுவோம்!
தொண்டைக் குழிநிறைந்து துப்பித் தொலைத்தாலும்
அண்டையயல் உள்ளார்க் கணுவளவும் நாம்கொடுக்கோம்!

பட்டென்றும் சீமைப் பருத்தித் துணியென்றும்
கட்டிக் கிழித்தாலும் கட்டாது போனாலும்
இல்லாத ஏழையர்க்கோர் கந்தையினை ஈந்தறியோம்!

கல்லாத நூலில்லை; கண்டஅறம் பல்கோடி!
என்றாலும் நாமோ இருந்தபடி யேயிருப்போம்!
குன்றாத செல்வம்! குலையாத நல்விளைவு!
தெய்வங்கள் கோடி! திருவிழா பல்கோடி!
மெய்யாக எண்ணுங்கள்! மேன்மை அடைந்தோமா?
என்ன நிலையால்--என்ன நிகழ்ச்சியினால்
என்னபடி நாமுயர்ந்தோம் என்றே உரைப்பீர்கள்?
நாம்பெற்ற நாகரிகம் எல்லாம் அயல்நாட்டார்
தாம்கண்டு ஈந்த தவப்பயனா இல்லையா?

நாளிரவாய்க் கண்விழித்தும் நல்லவுணா வுண்ணாதும்
ஆளரவங் காணா நடுக்காட்டில் ஆன்றலைந்தும்
கண்டளித்த நற்பொருள்கள் அல்லால்நாம் கண்டதென்ன?
பெண்டளித்த இன்பமும் பிள்ளைப்பே றும்அல்லால்
நாம்கண்ட தென்னவென நாட்டுதற்கு வல்லோமா?
ஆம் கண்டோம் என்றொன் றறைதற்கே உண்டென்றால்
அன்பும் அறனுமல்லால் வேறென்ன? ஆய்ந்தறிவீர்!
இன்பமெல்லாம் இவ்விரண்டே என்றே குறள்முழங்கும்!
பண்பும் பயனுமதாம் என்னும் பழநூற்கள்!

இத்தகைய அன்பெங்கே? இற்றை அறமுண்டா?
பொத்தகத்துள் அல்லாமல் போக்கினிலே பண்புண்டா?
எங்ஙன் பயன்கிடைக்கும்? ஏனிவ் விழிந்தநிலை?
உங்கள் மனமழுந்த எண்ணி உரைத்திடுங்கள்!
வள்ளுவரைக் கொண்டாடி வான்முட்டப் பேசிடுவோம்!
கொள்ளளவே அவ்வுரையை நம்முளத்துக் கொண்டோமா?

நூலெங்கே? நூல்கள் நுவன்ற அறமெங்கே?
கோலெங்கே? நேர்மைக் குணமெங்கே? பண்பெங்கே?
மெய்யெங்கே? வாழ்வென்னும் மேன்மைச் சிறப்பெங்கே?
வெய்ய கொடுவாழ்க்கை! வீணை பொய்வாழ்க்கை!
ஒவ்வொருவர் இல்லத்தும் ஒவ்வொருவர் உள்ளத்தும்
இவ்வினை நிற்கட்டும்! இன்பத் தமிழ்எங்கே?

மெய்வருந்த நாமுழையோம்! மேலோட்ட வாழ்வறிந்தோம்!
பொய்யஞ்சா நெஞ்சும் புளுகுரைக்கும் நாவுமல்லால்
இன்றைக்கு மீந்ததென்ன? ஏன்இம் மறவாழ்க்கை!
அன்றைக்கு யாத்த அறநூல் திருக்குறள்தான்!
ஆனாலும் அந்த அறநூல் உரைத்தவற்றை
ஏனோ மறந்தோம்; இனைய நிலைக்கிழிந்தோம்!
செப்பவாழ் வென்றுரைத்தோம்; செப்பமுற்று வாழவில்லை!
ஒப்புரவு கூறினோம்; நாம்காண ஒப்பவில்லை!

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை நன்றென்றோம்—நாம்செய்ய எண்ணவில்லை!
அல்லவை தேய அறம்பெருகும் என்றுரைத்தோம்!
சொல்லியவை நூலிலுள; வாழ்விற்குச் சோறென்றோம்!
ஒல்லும் வகையால் அறவினைகள் ஓம்பென்றோம்!
சொல்லும் வகையெல்லாம் பொய்சொல்லி வாழுகின்றோம்!
ஓம்பும் ஒழுக்கம் உயிரென்றோம்; அம்மாவோ
தீம்புச் செயலே ஒழுக்கமெனத் தேர்ந்துவிட்டோம்!
வெஃகாமை வேண்டும் பிறன்பொருளென் றோதினோம்!
அஃகாவென் றங்காந் தலைகின்றோம் செல்வமெனில்!
ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
ஊதிய மில்லை உயிர்க்கென்றோம்; ஆனாலும்
நம்பால் ஒருவன் நடையாய் நடந்தாலும்
இம்மி யளவும் எடுத்தீய ஒப்புகிலோம்!

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவென்றோம் என்றாலும்
பத்துருபாத் தாள்களைநான் நூறுக்கு வேனென்றால்
ஒத்தவன்பின் ஓடி ஒருநூறு தாள்தந்தே
ஏமாறிப் பல்லிளித்தே இல்லம் திரும்புகின்றோம்!

நாமாறிப் போனோம்; நமதுள்ளம் மாறியது!
நாகரீக ஆர்ப்பரிப்பில் நல்லுளத்தை மாய்த்துவிட்டோம்!
ஈகம் அறிந்தோம்; இரப்புமேற் கொண்டோம்;
குடிமை நலனழித்தோம்; கூட்டுணர்வை விட்டோம்;
அடிமை மனங்கொண்டோம்; ஆளுடைமை நீக்கிவிட்டோம்;
வள்ளுவனார் யாத்தளித்த வாய்மைத் திருக்குறள்போல்
வெள்ளம்போல் நூல்கள் விளங்கக் கற்றாலும்
நம்கீழ்மை நம்மைவிட் டிம்மி நகரவில்லை;
நம் மான நல்லுணர்வு நாற்று துளிர்க்கவில்லை;

--அன்புடையீர் என்சொல் அழல்போற் பாய்ந்தாலும்
மன்பதையுள் நாம்விட்ட மாண்பை நினையுங்கள்.
ஓர்மின் குறளை! உணர்மின் பொதுநோக்கு!
பார்மின் உலகம்! பழிதுடைமின்! மக்கட்கே
தொண்டு புரிமின்! துடைமின் துயரங்கள்!
பண்டு மொழிந்த நலங்கள் பலகோடி!
எண்ணம் புதுக்குமின்! இன்பம் பெருக்குமின்!
பண்ணும் புதுமையினும் பண்டைப் பழமையினும்
நல்லவற்றைத் தேர்மின்! நயன்மை கடைப்பிடிமின்!
அல்லவற்றை நீக்குமின்! அன்புணர்வை வித்துமின்!
--இன்ன விளைவுக்கு எருப்போலும் நற்கருத்தைக்
கன்னல் தமிழால் கவின்பெறவே கூறுதற்குப்
பாவலர் இங்கே பலர்வந்து நிற்கின்றார்.
ஆவல் பெருக அருந்தமிழ்த்தேன் பெய்வார்கள்!
நல்லமைச்சு சொல்வார்; நயன்பெறவே ஆசிரிய--
வல்லாண்மை கூறுவார்; வாய்மைச்சான் றோர்விரிப்பார்.
நண்பர் உழவர் நறுங்காத லர்துறவி
என்னுந் தலைப்பெடுத்தே எந்தமிழிற் பாவடிப்பார்.
இவ்வரிய பாவிருந்தை இங்கிருக்கும் பாவலர்கள்
ஒவ்வொருவ ராய்ப்படைப்பார் உண்பீர்! அவர்நாவில்
தவ்வி அமர்வாளெந் தாய்!

அறிவியற் கலைச் சொற்பட்டி--1

-அழகப்பர் தமிழ் மன்றம், காரைக்குடி-

(அறிவியலைத் தமிழிற் கொணரத் தனித்தமிழ்க் "கலைச் சொற்களின்மையே" ஒரு பெருந்தடையாக உள்ளது. வளநிலமுடையோன் வகையிலேயே உணவுக்கு, என்று தவிக்கின்ற நிலையினையே இஃது ஒத்திருக்கின்றது. இத்தாழ்ச்சிகள் ஒழிந்து, இவ்வுலகில் மீண்டும் தமிழனின் புகழ் ஓங்க வேண்டுமேயாயின், முதற்படியாக இக்கலைச் சொல்லாக்கப் பணி விரைந்து செயற் பெறுதல் வேண்டும். இம் முயற்சியில் எங்கள் சிற்றறிவின் துணைக் கொண்டு சிறிது தொலைவு நடந்துள்ளோம். நமது தேவையின் ஒரு சிறு பகுதியைக் கூட இதனால் நிறைவுபடுத்த இயலாது. பணி முழுமைபெற வேண்டுமேயாயின், அனைத்துக் கல்லூரி மாணாக்க மாணாக்கியர்களும், ஆசிரியப் பெருமக்களும் இத்துறையில் பெரிதும் உழைத்தல் வேண்டும். இதுகாறும் மொழியாக்கி வைத்துள்ள கலைச் சொற்களையும், இனி ஆக்குகின்ற கலைச் சொற்களையும் விடுத்துவைப்பின், "தமிழக அனைத்துக் கல்லூரி மாணாக்க மாணாக்கியர்" களின் சார்பில் வெளியிட எண்ணியுள்ள "கலைச்சொற் பெருந்திரட்டை" பெரு அளவிலும், சிறந்த முறையிலும் வெளியிட ஏதுவாகும். இவ்வேண்டுகோளை அருள்கூர்ந்து ஏற்றுக் கொள்ளுமாறு உங்கள் அனைவரையும் மிகவும் கேட்டுக் கொள்கின்றோம். வெளியிடப் பெற்றுள்ள சொற்களைப் பற்றிய உங்களுடைய கருத்துகள் வரவேற்கப் படுகின்றன. இவைதாம் சரியான சொற்கள் எனக் கூறுகின்றோம் இல்லை. பிழைகள் சுட்டிக் காட்டப்படின் திருத்திக் கொள்ளக் காத்துக் கிடக்கின்றோம். இத்தொகுப்பு வெளிவரப் பல்லாற்றானும் துணைநின்ற அழகப்பர் பொறியியற் கல்லூரி முதல்வர் அவர்களுக்கும், பிழை திருத்தித் தந்துதவிய அக்கல்லூரிப் பேராசிரியப் பெருமக்கட்கும், பல்வேறு பணிகளில் உடன்நின்ற மாணாக்கர்கட்கும் மன்றம் தனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.)

-(A)-

Aberration ஒளிப்பிறட்சி
[Sphrical-கோளப்பிறட்சி]
[Chromatic-வண்ணப்பிறட்சி]
Abrasive-உரைபொருள்
Absolute Convergent-தூயக் குவிப்பு
Absorption உறிஞ்சுதல்
Absorption Spectrum உறிஞ்சுவண்ணமாலை
Abundance ஏராளம்
Abutment அணைவு
Accelerating Force-முடுக்கு விசை

Acceleratlon முடுக்கம்
Accelerator முடுக்கி
Aceeptor ஏற்பி
Acid காடி
Acid dye காடிச்சாயம்
Activation ஊக்குதல்
Activator ஊக்கி
Adiabatic வெப்பமுறா
Adjacent அடுத்துள்ள
Adrops நாதாங்கி
Adsorption புறச் சேர்க்கை
Aircraft வானூர்தி
Air standard cycle காற்றொருப் புமைச் சுழற்சி
Algebra எழுத்துக்கணிதம்
Alignment நேர் ஓர்மை
Alkali காரம்
Alkali Metals-காரமாழைகள்
Allotropy புறவேற்றுமை
Alloy மாழைக்கலவை
Alternating current இரு-திசை மின்னோட்டம்
Alternate series குறிமாறு தொடர்
Amalgam இதட்பி
Ambiguous ஈரடி நிலை
Ammeter மின்னோட்ட மானி
Amphibious நிலநீர்வாழ்வன
Amplification பெருக்கம்
Amplifier மின் பெருக்கி
Amplitude வீச்சு
anabolism வளர்மாற்றம்
analytical ஆய்வுசார்ந்த
ane roid barometer } வெற்றறைக் காற்றழுத்தமானி

angle பாகை, கோணம்
anode நேர்மின்வாய்
antecedent (விகித) சம முன்-னுறுப்பு
anti bodies எதிர்ப்பொருட்கள்
antiparticle எதிர்த்துகள்
anti proton எதிர் நேர் மின்னி
aqueous நீர்ச்சார்ந்த
arc வில்
arch கமான்
arithmatic எண்கணிதம்
asyphalt நிலக்கீல்
assumption கொள் கோள்
astronomical-telescope வானோக்கி
astronomy வானியல்
atmosphere காற்றுவெளி
atomic battery அணுமின்கல அடுக்கு
atomic nucleous அணுக்கரு
atomic number அணுவெண்
atomic particle அணுத் துகள்
atomic weight அணுவெடை
automated biological lab., } தன்னியக்க உயிரினஆய்வகம்
automatic தானியங்கி
automobile தானுந்தி

(B)

Babul கருவேலமரம்
Bacillary Dysentery வயிற்றுப்-போக்கு
Bacteria நுண்ணுயிரி
Bacteriology நுண்ணுயிரியல்

Balcony நிலாமுற்றம்
Ballistic-Galvanometer அலைமுள் மின்மானி
Balusters குறுந் தறிகள்
Barnowl கோட்டான்
Basalt கந்தகப் பாறை
Basement floor நிலவறைத்தளம்
Batten சட்டம்
Battery மின்கல அடுக்கு
Beaker முகவை
Beam உத்தரம்;விட்டம்
Bearing capacity தாங்குதிறன்
Safe Bearing capacity காப்புத்தாங்குதிறன்
Beats துடிப்புகள்
Benchmark நிலைக்குறி
Binding energy இணைப்பாற்றல்
Bio chemistry உயிரிய இயைபியல்
Binomial ஈருறுப்பு
Bisect இருசமக் கூறிடு
Black cotton soil கரிசல் மண்
Blast furnace ஊதுலை
Blue priut நீலப் பதிப்பு
Body colour ஊடுநிறம்
Boiler கொதிகலன்
Boiler accessories-கொதிகலத் துணைப் பொறிகள்
Boiler mountings கொதிகலப் பதிவைகள்
Boiler shell கொதிகலக் கூடு
Bolt திருகாணி
Bolting பூத்தரித்தல்
Boreholes துளைக்குழிகள்
Botany பயிரியல்
Brainwaves மூளையலைகள்
Bressummer எலியோடி
Brittleness-நொறுங்குதன்மை
Brown fish owl ஊமன்
Brush தூரிகை
Bubble chamber குமிழறை
By product உடன் விளைபொருள்

C

Cable கடத்திவடம்
Cable gram வடமொழிச்செய்தி
Calcium சுண்ணகம்
Calorifie value வெப்ப மதிப்பு
Canonial form குத்துத்தொலை வடிவம்
Capacitance தேக்குதிறன்
Capacitive reactance-தேக்கத் தடை
Capacity கொண்மை
Caprimulgus பாதைக்கருவி
Carbohydrate மாவுப்பொருள்
Carbon கரி
Carbanaceous கரிம
Carbonate கரிமூவுயிரி
Carborundum கரிக்குருந்தம்
Carni vorous mammal புலாலுண் பாலூட்டி
Cast iron வார்ப்பிரும்பு
Catalyst வினையூக்கி
Cathode ray எதிர்மின்வாய்க்கதிர்
Cell மின்கலம்
Cement பைஞ்சுதை
[Limemortar] சுண்ணச்சாந்து

Centering தாங்குசாரம்
centre of buoyancy மிதவை மையம்
centre of gravity புவி ஈர்ப்பு மையம்
centre of similitude வடிவப் பொது மையம்
centrifugal-மையவெளியீர்ப்பு-
centripetal-மையஉள்ளீர்ப்பு-
-force -விசை
chain reaction தொடர்வினை

changechemical அகமாற்றம்
physical-புறமாற்றம்
charge மின்னேற்றம்
chemical luminosence-இயைபிய ஒளிர்மை
chicken pox சின்னம்மை
circuit மின்சுற்று
circuit theory மின்சுற்றுக்-கோட்பாடு
cloud chamber முகிற்பெட்டி
coagulation திரிதல்
coating மேற்பூச்சு
coaxial circles பொது மைய-வட்டங்கள்
coefficient of expansion
(a) absolote தற்பெருக்க-குணகம்
(b) apparent தோற்றப்-பெருக்க குணகம்
(c) liner நீட்சிக்குணகம்
coherent source ஒத்த ஒளி-மூலம்.
coil மின்சுருள்

collimator இணைக்கி
collinearity நேர்ப்படிவு
combination சேர்க்கை
combustibility எரிதன்மை
combustion எரிதல்
commonsurable காரணியுள்ள
[incommon .,] காரணியற்ற
commutator திசைமாற்றி
compact earth இறுகியமண்
compost பசனை
computer கணிப்பொறி
concave mirror குழி ஆடி
concentrationcell அடர்வு-மின்கலம்
concentration polarisation } அடர்வுமின்-வாயிழிவு
concentric circles } பொது மைய வட்டங்கள்
concrete கற்காரை
concurrency சந்திப்பு
condenser மின்தேக்கி
conduction கடத்தல்
conductivity கடத்துதிறன்
couductor கடத்தி
connecting rod இணைப்புத் தண்டு
conopyவிதானம்; நிலாமுற்றம்
consequent (விகித)சமமுன்னுறுப்பு
constant எண்; மாறிலி
continuousfuction தொடர்ச்-சார்பு
convection வெப்பச் சூழலியக்கம்
convergent-divergent குறுகி விரியும்

(தொடரும்)

முத்துமொழிகள்

□ 'நம் உழைப்பு எதுவும் உதவாது' என்று எண்ணி இறைவனை வேண்டுதல் செய்; அதே போல் 'வேண்டுதல் மட்டும் சோறு போடாது'' என்று எண்ணி நன்றாக உழை'
—செர்மன் பழமொழி.

□ தன்னலம் என்பது ஒரு சிறுஉலகம்; அதில் ஒரு மாந்தனே வாழ்கிறான். —நார்வே பழமொழி.

□ உன் மனைவியைக் கண்ணால் தேர்ந்து எடுக்காதே: காதால் தேர்ந்து எடு. —உருசியப் பழமொழி.

□ பண்பில்லாதவனையும் அன்பு பண்புள்ளவனாக்கும்.
—கிரேக்கப் பழமொழி.

△ நல்ல காலத்தில் முன் எச்சரிக்கையும் துன்பக் காலத்தில் பொறுமையும் வேண்டும்! —டச்சுப் பழமொழி.

○ உன் மானம், மதிப்பு எல்லாம் உன் நாக்கின் நுனியில் இருக்கின்றன! —அங்கேரியப் பழமொழி.

○ ''சள சள'' என்று பேசுகிறவனிடம் சரக்கு கொஞ்சமாகத் தான் இருக்கும். —பிரான்சு பழமொழி.

△ எளிதில் கிடைக்காதவை பணமும் அழகான பெண்களுந் தாம். —ஆங்கிலப் பழமொழி.

△ கடவுள், தாம் எங்கும் இருக்கமுடியாது என்பதற்காகவே தாயைப் படைத்தார். —இசுரேல் பழமொழி.

○ ''விண்ணில் ஒளிவீசும் விண்மீனாக நீ திகழாவிடினும், உன் இல்லத்தில் ஒளிவீசும் சுடராகத் திகழலாமே
—பாரசீகப் பழமொழி.

○ மனம் பரந்த கடலைப்போன்றது; பகுத்தறிவு என்பது கூரான ஒரு கத்திக்கு ஒப்பானது. —பல்கேரியா பழமொழி.

□ அடுத்த வீட்டுக்காரனுடன் நட்பாக இரு; ஆனால் இடையில் இருக்கும் வேலியை எடுத்துவிடாதே. —செர்மன் பழமொழி.

○ இன் சொல்லுக்கு இணை இந்த உலகில் வேறு ஏதுவும் இல்லை. எதிரியை வயப்படுத்தலாம். ஏன் இன் சொல்லால் இரும்புக் கதவையும் திறக்கலாம் —துருக்கி பழமொழி.

(தொகுத்தவர், கோ. மாணிக்கம்.)

செய்தியும் அறிக்கையும்

செய்தி எண்: உ த. க/4/2000

I. நெய்வேலி (தெ. ஆ.)

உ. த. க. சார்பில், நெய்வேலிக் கிளைக் கழகத்தின் அமைப்புக் கூட்டம் கன்னி 2அ, க௯௯௯. [13-10-68] அன்று திரு. த. கிருட்டினன், [முன்னம் தனித்தமிழ்க் கழக, தெ. ஆ, மாவட்ட அமைப்பாளர்] தலைமையில் கூடியது. திரு. த. கிருட்டிணன் கழகத்தின் நோக்கங்களையும் செயல்களையும் பற்றி விரிவாகக் கூறினார். திருவாளர் சுப. இராமச்சந்திரன், சுப. நாராணன், தா. கோவிந்தன், கோ. சக்கரவர்த்தி, ஆகியோரும் கழகத்தின் முன்னுள்ள பணிகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். பின்னர் நெய்வேலி கிளைக்குத் திரு சுப இளங்கீரன், (இராமச்சந்திரன்) தலைவராகவும், திரு துரை அருண்மொழி, (சக்கரவர்த்தி) துணைத் தலைவராகவும், திரு த. மொழிக்கரசு (கிருட்டிணன்) செயலாளராகவும், திரு சுப. திருமாறன், (நாராயணன்) பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழகஉறுப்பினர்கள் யாவரும் தங்கள் பெயர்களைத் தூய தனித்தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொண்டனர்,

2. நந்தம்பாக்கம்-சென்னை-

உ. த. க. கிளையின் அமைப்புக் கூட்டம் *கரு, சுறவம்,* ௨000 (26-1-69) அன்று மாவட்ட அமைப்பாளர், திரு ஆறுமுகனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு சி. தேவமறவன் வரவேற்றார். திரு ஆறுமுகனார், திரு அய்யாசாமி [மயிலை உ. த. க. கிளைத்தலைவர்] ஆகியோர், உ. த. க. அமைப்பினைப் பற்றியும், பணிகளைப் பற்றியும், தமிழ்மொழிக்கு இக்கால் ஆக்கஞ் செய்பவர்களைப் பற்றியும் விளக்கினார்கள். மேலும் ஊர்க்கழக உறுப்பினர்கள், திரு தாயடிமை, திரு ஏழுமலை, திரு பொன்னம்பலனார், திரு. திருநாவுக்கரசு ஆகியோர் இற்றையத் தமிழ்மொழியின் நிலையினைப் பற்றியும் எடுத்துக்கூறி, கூடியிருந்தோரை தமிழ்காக்க முன்வர வேண்டினார்கள்.

பின்னர் நந்தம்பாக்கம் கிளைக்குத் திரு தேவமாறன் தலைவராக வும், திரு தாயடிமை செயலாளராகவும், திரு திருநாவுக்கரசு பொரு ளாளராகவும் தேர்ந் தெடுக்கப்பெற்றனர். திரு பொன்னம்பலனார், நன்றி கூறினார்.

3. புதுப்பட்டி-சேலம் மாவட்டம்.

உ. த. க. கிளையின், அமைப்புக் கூட்டம் கரு *சுறவம்*, (28-1-69) அன்று கூடியது. புதுப்பட்டிக் கிளைக்கு திரு. முத்து சாமி தலைவராகவும், திரு இரா. பெரியண்ணன் செயலாளராகவும், திரு க. விசயராகவன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

4. சேலம் நூற்பு ஆலைக்கிளை-சேலம்.

உ. த. க. கிளையின் அமைப்புக் கூட்டம் *கரு சுறவம்*, உ000 (28-1-69) அன்று திரு பு. சி. தங்கவேலன், தலைமையில் கூட்டப் பெற்றது. சுறவத் திங்கள் முடிவிற்குள், அண்மையிலுள்ள காம ராசர் நகர், நெசவாளர் குடியேற்றத் தொடக்கப் பள்ளியில் கிழமை தோறும் வியாழன் மாலை 7மணி முதல் 8 மணிவரை. தமிழ்ப் புல வரைக் கொண்டு, திருவள்ளுவர் ஈராயிரமாண்டு பிறப்பு விழா விளைக் கருதி, திருக்குறள் வகுப்பு நடத்துவதென முடிவெடுக்கப் பெற்றது. பின்னர் சேலம் கூட்டுறவு நூற்பு ஆலைக்கிளைக்குத் திரு சே. சந்திரசேகரன் தலைவராகவும் திரு சு. துரைசாமி செயலாள ராகவும், திரு இரா. கிருட்டிணசாமி பொருளாளராகவும் தேர்ந் தெடுக்கப் பெற்றனர்,

5. திருச்சிராப்பள்ளி நகரக் கிளை

உ. த. க, கிளையின், அமைப்புக் கூட்டம் *சுறவம் கந*. ஆம் பக்க லன்று புலவர் திரு அரங்க வடிவேலன், முக. கீ. க, இ., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தலைவர் அவர்கள் "தமிழ்ப் பொழிவு" என்னும் கையெழுத்திதழை வெளியிட்டுச் சொற்பொழிவு நிகழ்த்தி னார். திரு அ. செல்லத்துரை செயலாளர், வர்வேற்புரையாற்றினார். திரு செ. முத்து அடிகள் தொடக்கவுரை நிழ்த்தினார். திரு வெள்ளி வீதியார் பொருளாளர், பேச்சாளர்கட்குத் துண்டு போர்த்தினார். புலவர் சேந்தமாங்குடியார், [மாவட்ட அமைப்பாளர்] திரு செந் தமிழ்க்கிழார் [பொருளாளர், உ. த. க.] ஆகியோரின் சொற்பொழி வுக்குப் பின், திரு. குமரப்பனார் கிளைக் கழகத் தலைவர், நன்றியுரை யுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

6. திருத்துறைப்பூண்டி-தஞ்சை மாவட்டம்

உ. த. க. கிளையின் அமைப்புக்கூட்டம், சுறவம் ௧௩ (26-1-69) ஞாயிறு அன்று பிற்பகல் ௩ மணியளவில், மாவட்ட அமைப்பாளர் திரு வி. பொ. பழனிவேலனுர் (ஆசிரியர், 'மாணுக்கன்'') தலைமையில் நடைபெற்றது பின்னர், திருத்துறைப்பூண்டிக் கிளைக்குத் தலைவராகப் புலவர் திரு சி. பண்டரிநாதன், அவர்களும், திரு க. திருமாறன் அ. இ. க., செயலாளராகவும், திரு கு. நானில வேந்தன், பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். செயலர் நன்றிகூற 'ஙு' மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

7. மும்முடி தரித்தான்-[முகவை] பறம்புக்குடி வட்டம்.

உ. த. க. கிளையின் அமைப்புக் கூட்டம் சுறவம் கம வியாழன் இரவு 6-30 மணிக்குத் திரு கோபால கிருட்டிணன், அஞ்சல் அலுவலர் தலைமையில் நடைபெற்றது. திரு பொன்னம்பலன் அவர்கள் இறை வணக்கம் பாடினுர். திரு கு. இராமநாதன் அவர்கள், கழகத்தின் நோக்கங்களைப் பற்றியும், செய்ய வேண்டிய கழகப் பணிகள் குறித்தும் உரை நிகழ்த்தினுர். திரு நா. க. சண்முகவேலன், திரு உ. குருசாமி ஆகியோர் தமிழ்க் கழகத்திஞல் ஏற்படும் நன்மைகளை எடுத்துக் கூறினர். கிளைக்கழகக் கூட்டம் ஒவ்வொரு தமிழ்த்திங்கள் இரண்டாம் ஞாயிறு அன்றும் கூட்டப் பெறல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. பின்னர், மும்முடி தரித்தான் கிளைக்குத் தலைவராக மு. பொன்னம்பலன் அவர்களும், செயலாளராக திரு இர. இராசேந்திரன் அவர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். செயலர் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

8. மடுக்கரை-புதுவை மாநிலம்.

உ. த. க. கிளையின் அமைப்புக் கூட்டம் சுறவம், ௧-அன்று நடைபெற்றது. அன்றுமாலை, 3மணிக்குச் செயற்குழுவினுல் மடுக்கரை கிளைக்குத் திரு தி. பி. சுப்பையா, தலைவராகவும், பொருளாளராகவும், திரு இ. செயராமன் அவர்கள் செயலராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். தனித்தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட உறுதி கொண்டனர். கிளைக் கழகத்தின் சார்பில் ''பாவாணர் படிப்பகம்'' அமைக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

9. குனிச்சி [வடவார்க்காடு], திருப்பத்தூர் வட்டம்.

உ. த. க. கிளையின் அமைப்புக் கூட்டம் கும்பம் ௪, அன்று நடைபெற்றது. திரு பெ. அழகு, ஆசிரியர், உ. தொ. பள்ளி, தலைமையேற்கவும், திரு ந. அ. அண்ணுமலை, மாவட்ட அமைப்பாளர் உ. த க., நோக்கங்கள் பற்றியும், செயற்பட வேண்டிய முறைகள் பற்றியும் விளக்கிக்கூறினுர். புலவர் திரு வ. சி. இலக்

குவன் அவர்கள் 'தமிழின் தொன்மை தூய்மை,' ஆகியவை பற்றிக்கூறி, இதன்வழி, உ. த. க இயங்கி மொழிக்கும், இனத்திற்கும் ஒளி கொளுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். புலவர் திரு வையாபுரி, (நத்தம் உ. த. க. கிளைத் தலைவர்) அவர்கள், கழகம் ஆற்றவேண்டிய பணிபற்றிக் கூறினார். திரு. மாவரசன், [தலைமையாசிரியர், உயர் தொடக்கப் பள்ளி, கவுண்டபனூர்] அவர்கள், ''தமிழ்த் தாய்'' என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்தினார். மாண்புமிகு திரு. அண்ணா அவர்கள் மறைந்ததற்கு வருத்தம் நிறைந்த இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர், குனிச்சிக் கிளைக்குத் திரு. அ. வேலொளி தலைவராகவும், திரு துரைமணி, செயலாளராகவும், திரு கோ. கோவிந்தன் பொருளாளராகவும் ஒருமனமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். செயலர் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

10. உதகைக் கிளை-நீலமலை

உ. த. க. வின் உதகைக் கிளையான 'திருவள்ளுவர் மன்றம்' தன் தொடக்க விழாவினை கும்பம் ஏ. (12-2-69) ஆம் பக்கலன்று நடத்திற்று. திரு ஆ சி. அரசமுத்து தலைமையேற்றார். உ.த க நெறி முறைகள் பற்றியனவும் கொள்கை விளக்கங்களும் விரித்துரைக்கப் பெற்றன. திரு ஆ. கன்னிவளவன் கிளைக் கழகத் தலைவராகவும், திரு ஆ. சி. அரசமுத்து செயலாளராகவும், திரு வி. செல்லப்பன் பொருளாளராகவும் ஒருமனமாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். கும்பம் 26-ஆம் பக்கல் திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழாவினை உதகையில் கொண்டாடத் தீர்மானிக்கப் பெற்றது. மேலும் உதகையில் உள்ள எல்லாக் கல்வி நிலையங்களும் திருவள்ளுவரின் 2000 ஆண்டு விழாவைக் கொண்டாடும்படி வேண்டுகோள் விடுக்கவும் தீர்மானிக்கப் பெற்றது.

11. பாகூர்க்கிளை-புதுவை

புதுவை மாநிலம், பாகூர் உ. த. க. கிளைக் கழகம் தி. பி. உ000 சுறவம் சஈ-இல் தொடங்கப் பெற்றது. அக்கால் திரு அன்பு நிலவன் அவர்கள் தலைவராகவும், திரு மருதக்கிழான் செயலாளராகவும், திரு இறைமகிழ்நன் பொருளாளராகவும் ஒருமனமாகத் தேர்வுற்றனர். அதைச்சார்ந்து கும்பம் கஉ-இல் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில், வரும் மேழ மாதத்திற்குள் திருவள்ளுவர் உ000 ஆண்டு விழாவைக் கொண்டாடுதல் வேண்டும் என்றும், உ. த. க. பாகூர்க்கிளையின் சார்பாகத் 'தளிர்' எனும் கையெழுத்து மாத இதழை நடத்துவதென்றும், பாகூர் அரசினர் கிளை நூலகத்திற்குத் தமிழ்வளர்ப்புத் தாளிகைகளான தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய திங்களிதழ்களை வருவிக்க ஆவன செய்தல்வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன. அடுத்த செயற்குழுக் கூட்டம் திருவள்ளுவர் விழா

அமைப்புக்கூட்டமாக அமையும் என்றும் தீர்மானிக்கப்பெற்றது.

12. கீழக்கரை-முகவை

முகவை (மா. வ.) கீழக்கரையில் கும்பம் ௫, (16-2-69) இல் உ. த. க. கிளைக் கழக அமைப்புக் கூட்டம் மாவட்டத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன் க. மு., அறி. இ அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கிளையின் தலைவராகத் திரு செ. சுப்பையா அவர்களும் செயலாளராகத் திரு பழ. வெற்றிவேந்தன் அவர்களும், பொருளாளராகத் திரு இளங்கோ அவர்களும் ஒருமனமாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

13. சாத்தனூர்-முகவை

முகவை மா. வ பறம்புக்குடி வட்டம் சாத்தனூரில் சிலை உக (12-1-69) அன்று உ. த க கிளை அமைப்புக் கூட்டம் மாவட்டத் தலைவர் திரு தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கிளையின் தலைவராகத் திரு ச. கலைவாணன் அவர்களும், செயலாளராகத் திரு தமிழடியான் (க இ) அவர்களும் பொருளாளராகத்திரு ஆ. வாழியாதன் க.இ;ப.இ. அவர்களும் ஒருமனமாகத் தெரிவு செய்யப்பெற்றனர்.

14. அழகப்பர்புரம்-முகவை

முகவை மா. வ , திருப்பத்தூர் வட்டம் காரைக்குடியில் பயிலும் பொறியியற் கல்லூரி மாணவர்கள். தமிழ்க்குமுகாயம் சிறக்கப் பணி செய்யும் நோக்கோடு அழகப்பர்புரத்தில் சிலை உ௦ (3-1-69)-இல் உ. த. க. கிளை அமைப்புக் கூட்டத்தை நடத்தினர். அவ்வமயம் திரு வி. மணியப்பன் (பொ.இ 4) தலைவராகவும் திரு இரா. தியாகராசன் (பொ.இ.3) செயலாளராகவும், திரு அரி. கன்னிவேல் முருகன் (பொ.இ.2) பொருளாளராகவும் தெரிவு செய்யப்பெற்றனர்.

15. முதலைப்பட்டி-முகவை

முகவை மா.வ. திருப்பத்தூர் வட்டம் முதலைப் பட்டியில் சுறவம் ௭ (20-1-69)-இல் திரு. இளங்கீரன் அவர்கள் தலைமையில் உ. த. க. கிளை அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. திரு குழ. இமயவரம்பன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார் தலைவர் கழக நெறிமுறைகளை விளக்கிப் பேசினார். திரு சோ. சிற்றம்பலம் க. இ. கிளைக்கழகத் தலைவராகவும், திரு குழ. இமயவரம்பன் செயலாளராகவும் திரு இளமுருகு பொருளாளராகவும் ஒருமனமாகத் தேர்வுற்றனர். மூவரும் தமிழ்த் தாயின்மேல் ஆணையிட்டுப் பொறுப்பை ஏற்றனர். பின், விரைவில் வள்ளுவர் ஈராயிரம் ஆண்டு விழாக் கொண்டாடுவதென்றும், அதற்குத் திரு. தமிழ்க்குடிமகன் அவர்களை அழைப்பதென்றும் முடிவு செய்யப்பெற்றது.

அறிக்கை எண்: உ. த. க. 4/2000

அ. மாவட்ட அமைப்பாளர்களுக்கு

1. சேர்ப்புப் படிவத்தில் கட்சிப் பெயரைக் குறிப்பிடுவதற்காக உள்ள வினாப்பகுதி ஒருசில நடை முறைகளுக்குத் தடையாக உள்ள தெனக் கருதப்பெறுவதால், அதனை நீக்கி விடுமாறும் அது நிறைவு செய்யப் பெற வேண்டியதில்லை யென்றும் இதன் வழி கேட்டுக்கொள்ளப் பெறுகின்றது.

2. அறிக்கை எண். உ. த. க. 3/2000-இல் கேட்டுக் கொண்டதற் கிணங்க, சேலம் மாவட்டம்-அம்மாப்பேட்டை உ. த. க. கிளைக் கழகமும், தெ. ஆ. மாவட்டம் நெய்வேலி கிளைக்கழகமும் தம் பொறுப்பில் 'மாத விளைத்த அறிக்கைகளை' அச்சிட்டு விற்பனைக்குத் தர இசைவு தெரிவித்துள்ளன. இவையும் இன்னும் இவ்வபோல் பிற கழகங்களும் ஓராண்டிற்குரிய விளைத்த அறிக்கைகளின் விலை விளக்கங்களைத் தெரிவித்தால், குறைந்த விலைக்குத் தர வியலும் கழகத்தின் விற்பனைக்குத் தலைமைக் கழகவழி ஏற்பாடு செய்ய வியலும்.

3. கிளைக் கழகங்களை ஓரளவு பரவலாகத் தொடங்குதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பெற்று வருகின்றன. மாவட்ட அமைப்பாளர் களும் இத்துறையில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருப்பது மிகவும் பாராட்டுதலுக்கும் மகிழ்வுக்கும் உரியதாகும். அவ்வக்கால் தோற்று விக்கப்பெறும் கிளைக் கழகங்கள் பற்றிய செய்திகளையும் விளைத்த அறிக்கைகளையும் தவறாமல் உடனுக்குடன் தலைமைக் கழகத்திற்கு விடுக்குமாறு மாவட்டத் தலைவர்கள் ஏற்பாடு செய்வார்களாக.

4. கிளைக் கழகங்களில் இதுவரை சேர்க்கப்பெற்ற உறுப்பினர் படிவங்களை மாவட்டத் தலைவர்கள் தொகுத்துத் தலைமைக் கழகத் திற்கு விடுத்தல் வேண்டும். ஒவ்வொரு சேர்ப்புப் படிவமும் சரி பார்க்கப் பெற்று, அதன் தலைப்பில் உறுப்பினர் பற்றுமுறி எண் குறிக்கப் பெறுதல் வேண்டும். அதனடியில் மாவட்டத் தலைவர் தம் கையொப்பத்தையும் பக்கலையும் இடுதல் வேண்டும். சேர்ப்புப் படி வங்கள் தலைமைக் கழகத்திற்கு வந்த பின்பே அவற்றிற்குரிய உறுப்பினர் அடையாள அட்டைகள் மாவட்டத் தலைவர் வழியாகக் கிளைக் கழகங்களுக்கு விடுக்கப் பெறும்,

ஆ. கிளைக் கழகங்களுக்கு

தொடக்கத்தில் சேரும் உறுப்பினர்கள் தம் பெயர்களைத் தூய தமிழிலேயே தருதல் வேண்டும். பெரும்பாலான உறுப்பினர்களின் பெயர்கள் பிறமொழிப் பெயர்களாக இருக்கின்றன. ஏற்கனவே பெயர் மாற்றம் செய்து கொள்ளாத அன்பர்கள் உடனே தாம் மாற்றிக் கொள்ள விரும்பும் பெயர்களைக் கிளைக் கழகங்களின் வழி, தலைமைக் கழகத்திற்கு விடுக்கவும். அப்பட்டியலின் ஒருபடி மாவட் டத்தலைவர்க்கும் விடுக்கப் பெறுதல் வேண்டும். அன்பர்கள் இந் நெறியீட்டைக் கண்டிப்பாகக் கடைப் பிடிக்கக் கேட்டுக் கொள் கிறேன்.

மே/பா. தென்மொழி,
கடலூர்-௧.
கும்பம் ௧௭. தி. பி. ௨௦௦௦

பெருஞ்சித்திரன்,
பொதுச்செயலாளர்,
உலகத் தமிழ்க் கழகம்.

விருந்தன. என்போன்ற மாணவர்கள் அத்தகு கட்டுரைகளைத் தொடர்ந்து எதிர்பார்க்கின்றோம். ''என் இயக்கம் பற்றிய விளக்கங்களை''த் தொடர்ந்து வெளியிட்டருள்க. 'தமிழென்னும் கூட்டினுள் தமிழரே இணைக'' ''பாய்புலியே! எங்கே உன் சீற்றம்?'' போன்ற இனவுணர்வும், மொழியுணர்வும் ஊட்டி எழுச்சிதரும் பாக்களை மிகுதியாக வெளியிட வேண்டுமென விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன். தமிழ் நலமே கருதித் தன்னலம் ஒதுக்கித் தாழாதுழைக்கும் தங்கள் தாளாண்மைக்குத் தலைவணங்கித் தங்கள் தலைமையில் தமிழின இளைஞர்கள் தன்மானவுணர்வோடு வீறுகிளர்ந்தெழும் நாளெண்ணித் தங்கள் வழி நடையிடுகின்றேன்.

கும்பம், ௯
நெல்லை-௭

சி. தமிழ்வென்றி.

△ அன்புடையீர் வணக்கம். நீங்கள் வெளியிடும்இலக்கியத்திங்கள் இதழ்கள் 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' இவற்றைப் படித்து பெரும் மகிழ்ச்சி யடைந்தேன். நீங்கள் தமிழ் அன்னைக்குச் செய்துவரும் தொண்டைப் பாராட்டுகிறேன். பல இன்னல்கள் நேர்ந்தபோதிலும் தொடர்ந்து தமிழ் அன்னைக்கு ஆற்றிவரும் தொண்டை நினைத்துப் பெருமைப் படுகிறேன். நம் தமிழ் மக்களிடை கல்வியறிவு மென்மேலும் வளர்ச்சியடைந்து நீங்கள் வெளியிடும் இலக்கியத் திங்கள் இதழ்களை வரவேற்றுத் தங்களுக்கு ஊக்கமளிக்க இறைவனை வேண்டுகின்றேன்.

உ. பூ. இராசேந்திரன், பூனு. 25-2-69

பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். தங்களின் நூறுசிரியம் என்னும் இலக்கியம் காணக்கிடைக்காத கற்கண்டு! கண்டோரின் கருத்தைக்கவரும்! உண்டோரின்-உணர்ந்தோரின் உளத்தை உருக்கும்! இக்கால இலக்கியம் படைப்பவர்களிடை, இஃது ஒரு தனிநடை!

எனின், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு போன்ற இலக்கியங்களையும், பின்னும் பாவியங்களையும் ஒருமுறை தானும் புரட்டாத இவர்கள் (நம்மனோர்-தமிழர்கள்) எங்ஙனம் இந் நூறுசிரியத்தைப் படித்துப் பயன்பெற முடியும்? மேலும் தமிழில் இலக்கிய வளத்திற்குக் குறைவில்லை! பண்டைய இலக்கியங்களையே புரட்டாத-அறியாத-அறியமுடியாதபோது மேன்மேலும் இலக்கியங்களை இயற்றுதல், அவற்றை மறைப்பதற்கு-மறப்பதற்கு வழி கோலுமேயல்லால், தமிழன் சிறப்பதற்கு-சீர்பெறுதற்கு-தன்னிறைவு அடைதற்கு வழிகோலாது என்பதனையும் அறிதல் வேண்டும்.

ஆங்கிலம்-செருமானியம் போன்ற மொழிகளின் இக்கால அறிவியல் வளர்ச்சி நாமும் பெற்றுலொழிய முழுவளர்ச்சி பெற்றதாக-பெற்றுவிட்டதாக யாரும் கூறுதல் முடியாது. ஆக்கவேண்டிய பணிகள் அறிவியலில் ஏராளம்! ஆக்கப் பணிக்கு ஊக்கங் கொடுத்து இற்றைய தூக்கநிலையைக்களைந்து முன்னேற்றம்காண விழைவீராக!

கும்பம் ௩-௩-௨000
சென்னை-16.

சி. தேவமறவன்.

O ஆசிரியப் பெரும, பேரறிஞர் அண்ணு அவர்களின் இழப்புப் பற்றிய தங்களது ஆசிரியவுரை என் மனதை அமைதிப்படுத்திய அளவுக்கு வேறெவ் விதழ்களின் ஆசிரியவுரையும் அமைதிப்படுத்திட வில்லை.

இர. நக்கீரன், எதுமலை

இறைவணக்கப் பாட்டு.

(ஆங்காங்கு நடைபெறும் கூட்டங்களிலும், விழாக்களிலும், பொதுவுணர் வெழுப்பவேண்டிய பள்ளிகளிலும் தொடக்கத்தே பாடப்பெறும் இறைவணக்கப் பாட்டு பொதுவானதாக இல்லை என்ற குறை என்னிடம் கூறப்பெற்றதுண்டு. எனவே மாந்த இனத்திற்கே பொதுவானதும், மெய்யுணர்வு ஒன்றே கொளுவப் பெற்றதுமான இப்பாட்டை எழுதினேன். பொதுவினர் பயன் படுத்திக்கொள்க.)

விரிவிசும்பைச் செங்கதிரை விண்மீனை நிலவை
வெப்பவொளி மண்டிலத்தை விளங்கருபாழ் வெளியை,
எரிவளியைத் தீம்புனலை இருநிலத்தை, நிலமேல்
ஏந்துகின்ற நுண்ணுயிரை இயங்குநிலைத் திணையை,
திரிதருமென் புள்ளினத்தைத் திறல்விலங்கை நீரில்
தேங்குறுமீன் கூட்டத்தைத் தெருள்மாந்த வினத்தைப்
புரிமனத்தைப் பெருநினைவைப் பொருள்செறிந்த தமிழைப்
புலப்படுத்துந் திறலெதுவோ புலனுறவாழ்த் துவமே!

தமிழாருஞ் செம்பொருளைத் தவிர்தலிலா முதலைத்
தாயருக்குந் தாயாகித் தனித்திருக்கும் மெய்யைக்
குமிழாரும் உயிர்ப்புனலைக் கூட்டுவிக்கும் நெறியைக்
கோதில்லா நல்லுணர்விற் குமிழ்த்தெழுமெய்க் கூத்தைச்
சிமிழாரும் இமைவிழிக்குள் சிறுபாவைக் குள்ளே
சிதறொளியைக் குவிக்குமொரு செயலறுத்த செயலை
அமிழாதெம் நன்னெஞ்சம் அங்காந்த தாகி
அறிவறியத் துடிப்பதெதோ அதுதனைவாழ்த் துவமே!

-துரை-மாணிக்கம்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.